
உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 41] துந்துபி ஆண்டு ஐப்பசித்திங்கள் 10-11-82 [இதழ் 12



கலியுக வரதன் கந்தன்

கந்த சஷ்டித் திருநாள் 21—11—82

தருமையாதீனக் குருமுதல்வர



ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

--[☆]--

ஆறுதலை இல்லை
  அடியேனுக் கன்பாகத்
தேறுதலை சொல்வார்
  சிலர்இல்லை — வேறெனக்குத்
திக்காரும் இல்லை
  சிவனே பழிக்கஞ்சி
சொக்கேநின் தாளே துணை.

—சொக்கநாத வெண்பா. 91.

ஆசிரியர் :-

வித்துவான்

இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள்

துணையாசிரியர் :-

மகாவித்துவான்

சி. அருணைவடிவேல் முதலியார்

உ

குருபாதம்

" ஞானசம்பந்தம் "

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 41	10–11–82	இதழ் 12

உட்பொருள்

—※—

ஆண்டுச் சந்தா உள்நாடு ரூ. 12

ஆண்டுச் சந்தா சிலோன் ரூ. 23

ஆண்டுச்சந்தாவெளிநாடு ரூ. 25

ஆயுள் சந்தா உள்நாடு ரூ. 125

ஆயுள் சந்தா வெளிநாடு ரூ. 250

உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 41 ‖ துந்துபி - ஐப்பசி - 10—11—82 ‖ இதழ் 12

திருச்சிற்றம்பலம்

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே.

— ஞானசம்பந்தர்,

திருச்சிற்றம்பலம்

அறம் வளர்ந்திடுக! மறம் மடிவுறுக,

நன்மை மலரும் நாள் :

இன்பம் பொங்கும் தீபாவளித் திருநாள் மலர்கிறது! திருவருளும், குருவருளும் துணைநிற்க இல்லங்களில் மங்கள தீபங்கள் சுடர்விடுகின்றன. புனித நீராடி, புத்தாடை உடுத்தி, மத்தாப்புக் கொளுத்தி, பட்டாசுவெடித்து இனிப்புக்கள் உண்டு மக்கள் மகிழ்ச்சியில் திளைக்கின்றனர். பன்னூருண்டுகளாகப் பாரதப் பெருநாட்டின், நாடுதழுவிய பெருவிழாவாகத் தீபாவளி திகழ்கிறது. தீமை அகன்று நன்மை மலரும் மகிழ்ச்சித் திருநாளாகிய இனிய இத்தீபாவளித் திருநாளில் ஞானசம்பந்தம் அன்பர்களுக்கு நல்வாழ்த்துக் கூறுவதில் மகிழ்ச்சி அடைகிறது. நாடும் மக்களும் நலம்பல பெற்று நீடுவாழப் பிரார்த்தித்துச் சிறக்கிறது.

விழாநோக்கு :

விழாக்களும், பண்டிகைகளும் இந்தியப் பண்பாட்டில் பேரிடம் வகிப்பன. கண்மூடித்தனமான கேளிக்கைகள் இங்கே விழாக்களாக மலர்வதில்லை. உயரியநோக்கும், சிறந்த நல்லுணர்வுகளும் இவற்றில் பிரதி பலிக்கக் காண்கின்றோம். விழாக்களைச் சமயத் தொடர்பானவை என்றும், சமூகத் தொடர்பானவை என்றும் பகுப்பர். யாதாயினும் இவற்றின்

உள்ளீடுகள் மக்கள்மத்தியில் உயர்பண்புகளை நிலைநாட்டுவன வாகவே அமையக் காண்கிறோம். சமூகக் கூட்டுணர்வு, விருந்தோம்பும் பண்பாடு, பக்தி நோக்கு, எல்லோரும் ஒருசேர மகிழ்ந்திருக்கும் நல்லுணர்வு என்பன விழாக்களின் முக்கியக் குறிக்கோள்கள். தீபாவளி இவ்வகையில் பெரிதும் சிறப்பு உடையது.

புராண வரலாறு :

தீபாவளித் திருநாளின் உண்மையான உள்ளீடு இது வெனத் திட்டமாகக் கூற இயலாது. தீமைபுரிந்து மக்களை வருத்துகிறான் நரகாசுரன் என்ற கொடியோன்: மக்கள் அளவிலாத் துயருறுகின்றனர். திக்கற்றவர்களுக்குத் தெய்வமே துணை என்பர்: மக்கள் திருமாலைப் போற்றி முறையிடுகின்றனர். ஒரு ஐப்பசித் தேய்பிறைச் சதுர்த்தசியில் விஷ்ணுமூர்த்தி வெளிப்பட்டு நரகாசுரனை வதைக்கிறார். நரகாசுரனின் இறுதி விருப்பமாக - தீமை அழிந்த இந்நாளை மக்கள் தீபாவளியாகக் கொண்டாடுகின்றனர். இதுவே காலங்காலமாக வழங்கிவரும் தீபாவளி பற்றிய மரபுச் செய்தி. இது பற்றி நாட்டின் பலபகுதி களிலும் சிறிதுசிறிது வேறுபட்டு வழங்கும் புராணச் செய்தி களும் உண்டு. எங்ஙனமாயினும் தீமை அழிந்த நாளை மக்கள் தீபாவளியாகக் கொண்டாடுகின்றனர் என்பதில் கருத்து வேறுபாடுகள் இல்லை.

உள்ளீடு :

ஐப்பசித்திங்கள் தேய்பிறைச் சதுர்த்தசி நாளின் விடியலில் எழுந்து மக்கள் எண்ணெய் தேய்த்து வெந்நீரில் நீராடு கின்றனர். புத்தாடை அணிந்து, மத்தாப்புக்கள் கொளுத்தி புதிய இனிப்புக்கள் உண்டு, மகிழ்கின்றனர். இமயம் முதல் குமரி வரை தீபாவளி இந்துமக்கள் அனைவராலும் கொண் டாடப்படுவது ஒரு பெருஞ் சிறப்பாகும். எண்ணெய் தேய்த்து நீராடுதல் அழுக்கு நீக்கத்திற்கு அறிகுறியாகும். வெந்நீரில் இலக்குமிதேவி உறைவதாக ஐதிகம். தீமைபொடிபடுவதை வெடிகளால் உணர்த்துகின்றனர். தீபங்கள் ஏற்றுவது மங்கலத் தின் அறிகுறி. புத்தாடையும், இனிப்புக்களும் மனமகிழ்ச்சிக்கு அடையாளங்கள்.

பேதமிலாத் திருநாள் :

தமிழகத்தின் பண்டைவிழாக்களில் தீபாவளி குறிக்கப்பட வில்லை. கார்த்திகை விளக்கீடு சங்கநூல்களிலும் தேவாரத்திலும்

குறிக்கப்படுகிறது. தீபாவளி என்பதைத் தீப ஆவளி எனப் பிரித்துத் தீப வரிசை எனச் சிலர் பொருள் கூறுவர். தீபாவளியும் கார்த்திகை விளக்கீடும் அடுத்தடுத்து வருகின்றன. கார்த்திகை விளக்கீடே தீபாவளியாக ஒருகாலத்தில் மாறி – பின் வெவ் வேறு விழாக்களாக அமைந்திருக்கலாம் என்பது சிலர்கருத்து. புராணவரலாற்றில் விஷ்ணு மூர்த்தி இடம் பெற்றிருந்தாலும், சைவத்தின் ஒருபகுதியே வைணவம் என்ற ஆன்ரேூர் கொள்கைப்படியே சைவ – வைணவ பேதமின்றி மக்கள் அனைவராலும் இத்திருநாள் கொண்டாடப்படுவது குறிக்கத் தக்கது.

வேறு சில நோக்கங்கள் :

புரட்டாசித்திங்களில் தொடங்கும் கேதாரகௌரிவிரதத்தின் நிறைவு நாளே தீபாவளி என்றும், இது லக்ஷ்மிபூஜைத் திருநாள் என்றும் சிலர் கருதுகின்றனர். வடநாட்டில் குறிப்பாக மகாராஷ்டிரா, குஜராத் மாநிலங்களில் இந்நாள் ஆண்டின் தொடக்கமாகக் கருதப்படுகிறது. லக்ஷ்மிபூஜை செய்து புதுக் கணக்கெழுதுவது, அனைவருக்கும் இனிப்பு வழங்குவது என்பன அங்கே நடைமுறை வழக்கமாக இருந்து வருகிறது. தமிழ் நாட்டில் கார்த்திகை விளக்கீட்டைப்போல் வீடுகளில் ஏராள மான தீபங்களை நிரல்பட ஏற்றும் வழக்கம் அங்கே நிலவு கின்றது.

தேசிய விழா :

தீயவனுகிய நரகாசுரன் இறக்கும்போது, தான் இறந்த நாளை மக்கள் மகிழ்ச்சியாகக் கொண்டாட வேண்டுமென்று பிரார்த்தித்தான். திருமாலும் அதற்கு இசைந்தார் என்பர். தீயவனுயினும், அவன் இறுதி ஆசையை நிறைவேற்றும் இறைவனது கருணையும் இவ்விழாவின் படிப்பினையாக அமை கிறது. மக்கள் விரும்பிக் கொண்டாடிவரும் இத்தேசியப் பெரு விழாவில் இன்பமும் மகிழ்ச்சியும் உள்ளீடும் நிறைந்திருத்தல் கண்கூடு. தீமை அகன்று, நன்மை கால்கொள்ளும் தீபாவளி நன்னாளில் நாடும் மக்களும் இன்னலகன்று இன்பத்தில் திளைக்க இறையருளைச் சிந்தித்து அனைவரும் தீபாவளித் திருநாளைப் போற்றி மகிழ்வோம்.

அறம் வளர்ந்திடுக !

மறம் மடிவுறுக !

— பாரதியார்.

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்

தருமையாதீனம் ஆவணிமூல விழாவில்
சைவ சித்தாந்த ஆய்வு மையத்தைத் தொடங்கிவைத்து

வழங்கியருளிய

ஆசியுரை

29—8—1982

ஆவணிமூலத் திருநாள் ஆலவாயிறைவன் அடியார் படுதுயராயின எல்லாம் அகற்றியருளிய நன்னாள். திரிபுணர்வுடைய மன்னனைத் தெருட்டிச் செந்நெறிக்கேற்றிய பெருநாள். அன்று இறைவனால் துயரகற்றப்பட்ட அடியவர் மணிவாசகரும் வந்தியம்மையுமாவர். திரிபுணர்வுடையவனாயிருந்து இறைவனால் தெருட்டப்பட்டவன் அரிமர்த்தன பாண்டிய மன்னன். இவ்வாறு இறைவனது கருணை பெருகி அன்பர்களை ஆட்கொண்ட நன்னாளாகிய இந்நாளில் பொதுவாகச் சமயதத்துவங்களையும், சிறப்பாகச் சைவ சித்தாந்தத் தத்துவங்களையும் ஆராய்ச்சி செய்யும் ஆய்வு மையத்தைத் தொடங்கிவைப்பது பொருத்தமானதாகும்.

சமநிலை :–

துன்பத்தை இன்பமாகக் கருதுவதும், இன்பத்தைத் துன்பமாக எண்ணுவதும் தத்துவ உணர்வு இன்மையால் – மெய்யுணர்வு வாய்க்கப்பெறுமையால் உண்டாவனவாகும். மெய்யுணர்வு, தத்துவ ஆய்வு மேற்கொண்டவர்களுக்கே தலைப்படுகிறது. மெய்யுணர்வு தலைப்பட்டவர்கள் இன்பத்தையும் துன்பத்தையும் ஒன்றாகவே கருதுவர். அத்தகையவர் கடமை உணர்வுகளில் தவறாத வாழ்வினை உடையவராவர். உரிமை என்ற உணர்வே இல்லாதவராயிருப்பர். அவர்களே என்றும்

இன்பம் பெருகும் இயல்பினராய் விளங்குபவர். அப்பரடிகள் போன்றவர்கள் இந்நிலையில்வாழ்ந்துகாட்டிய பெருமக்களாவர். 'இன்பமே எந்நாளும் துன்பமில்லை' என்பது அப்பரடிகளின் அருள்வாக்கு. இன்பத்தையும் துன்பத்தையும் சமமாகஎண்ணும் மனநிலையைச் சமநிலை எனக்கூறுகிறது தொல்காப்பிய உரை. சமநிலையாவது 'செஞ்சாந் தெறியினும் செத்தினும் போழினும் நெஞ்சோர்ந் தோடா நிலை' எனச் சமநிலைக்கு விளக்கம் தருகின்றனர் தொல்காப்பிய உரையாசிரியர்கள். (செஞ்சாந்து - சிவந்த நிறமுடைய சந்தனம்) மணமுள்ள சந்தனம் பூசினாலும் கோடெறிகொண்டு உடலைச் செத்தினாலும் பிளந்தாலும் மனம் மாறுபடாதநிலையைச் சமநிலை எனக் கூறுகின்றனர்.

திருவள்ளுவரும் இன்பதுன்பகளைச் சமமாக எண்ணும் மனநிலையை மக்கள் பெறவேண்டும் என வலியுறுத்துகிறார்.

இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான்
துன்பம் உறுதல் இலன்.

இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர்
துன்பம் துடைத்தூன்றும் தூண்.

இக்குறள்களால் வள்ளுவர் இன்பத்தைக்கண்டு மகிழாமலும் துன்பத்தைக்கண்டு துவளாமலும் இருக்கும் மனநிலையை மக்கள் பெறவேண்டுமெனக் கூறுவதைக்காணலாம்.

இன்பத்துன்பங்களைச் சமமாக எண்ணும் மனநிலைபெறுதல் எளிதல்ல. தத்துவ உணர்வுகளை நெறியாக வளர்ப்பதனாலேயே அதனை மக்களிடையே உண்டாக்க முடியும்.

தத்துவ உணர்வும் பயனும் :-

தத்துவ உணர்வு வளர்ச்சியடையுமானால், நாட்டில் மக்களிடையேஏற்படும்பல்வேறுகுழப்பங்களும்அகலும். மனம்தெளிவு பெறும். நன்மை உண்டாகும். மணிவாசகரிடத்தில்கொண்ட திரிபுணர்வு மன்னனை மயங்கச்செய்தது. தத்துவ உணர்வு தலைப்படாமையால் மணிவாசகரை வருத்திய மன்னன் இடர்ப்பட்டான். அவ்வுணர்வில் தலைநின்ற மணிவாசகர் துன்பப்படவில்லை. தத்துவஞானிகளுக்கு, இறையருள் வாய்க்கப்பெற்றவர்கட்கு வரும் துன்பங்கள் உடலூழாய்க் கழியுமேதவிர அவர்களை அவை வருத்தமாட்டா. இதனை அடியவர்வரலாறுகள் பலவற்றிலும் நாம் காணலாம்.

சமய தத்துவ ஆராய்ச்சி மக்கட்குப் பலவகைகளிலும் வேண்டப்படுவதொன்ருகும். மனிதனை மனிதனுக வாழச் செய்து தெய்வமாக உயர்த்தும் இவ்வாராய்ச்சியை மேற் கொள்ளுதல் அறிவுடைப் பெருமக்களின் தலையாய கடமை யாகும். எனவேதான் சைவ சித்தாந்த ஆய்வுமையத்தை பல்லாண்டுகளாகச் சமய தத்துவ உணர்வின் பண்ணையாகத் திகழும் தருமையாதீனம் திருவருள் உந்துதலால் தொடங்க முன்வந்திருக்கிறது.

அனுபூதிமான்களின் நிலையம் :–

தத்துவ உணர்வுடையவர்களை அனுபூதிமான்கள் என்பர் அறிஞர். இத்தகையோர் பலரைச் சொத்தாகப்பெற்றது நமது தருமை ஆதீனம். நமது ஆதிகுருமூர்த்திகளாகிய ஸ்ரீ குருஞான சம்பந்தர் சிறந்த அனுபூதிமான். எனவேதான் ஆதீனத் திருக் கூட்டத்தினரின் செயல்களை அவர் குறிப்பிடும்போது,

ஆய்வார் பதிபசு பாசத்தின் உண்மையை, ஆய்ந்தறிந்து
காய்வார் பிரபஞ்ச வாழ்க்கையெல்லாம், கல்வி கேள்வியல்லல்
ஒய்வார், சிவானந்த வாரியுள் ளேயொன் றிரண்டுமறத்
தோய்வார், கமலையுள் ஞானப்ர காசன்மெய்த் தொண்டர்களே.

என்று அருளிச்செய்கிருர். பிராசாதயோகமுறை நமது ஆதீன நடைமுறையில் இருப்பது என்பதை அவர் அருளிய சோடச கலாப்பிராசாதசட்கம் என்ற நூலாலும் அது அனுபவத்திலிருந் ததை நமது திருமடத்திலுள்ள பதினுறெடுக்கம் என்ற தவச் சாலையாலும் நாம் அறியலாம்.

குருஞானசம்பந்தர் அருளிய சிவபோகசாரம், சிவானுபவத் தைப் பெற்றுத் தமது அனுபவ நிலையை உரைக்கும் நூலாக விளங்குவதைப் பலரும் உணர்வர்.

கற்கஇடர்ப் பட்டுமிகக் கற்றஎல்லாம் கற்றவர்பால்
தற்கமிட்டு நாய்போலச் சள்ளெனவோ — நற்கருணை
வெள்ளம் அடங்கும் விரிசடையாற் காளாகி
உள்ளம் அடங்கவல்ல வோ.

என்ற சிவபோகசாரப்பாடல் ஞானநூலாராய்ச்சி, அனுபவத் திற்கே உரியது எனத் தெளிவுசெய்வதைக் காணலாம்.

நான்காவது குருமூர்த்திகளாகிய ஸ்ரீ மாசிலாமணி தேசிக சுவாமிகளைத் தரிசிக்கவந்தார் குமரகுருபரர். அவர் தருமையின் எல்லையை அணுகிய அளவில் சிவன் என்ற சொல்லின் முதலில் உள்ள நெட்டெழுத்து ஒரு மாத்திரை குறைந்து சிவன் என ஆயிற்று. இதை, ‘ஊரிற்குறுகினேன் ஓர்மாத்திரை அளவில்

பேரிற் குறுகினேன் பின்' என்று குமரகுருபரர் தம் அனுபவத்தை உரைக்கக் காண்கிறோம். அதற்கேற்பக் குருமூர்த்திகளும் அவரிடம் 'ஐந்து பேரறிவும்' என்ற பெரியபுராணப் பாடலுக்கு அனுபவப் பயன் உரைக்க என்றுதான் ஆணையிட்டார்கள் என்ற வரலாறும் நோக்கத்தக்கது தருமையாதீனம் சிவஞான அனுபவ நிலையமாக விளங்கி வந்துள்ளதை இவ்வரலாறுகள் நமக்கு நன்கு உணர்த்தும்.

திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீ ஞானியார் சுவாமிகள் நம் அன்பர் திரு. வச்சிரவேல் முதலியார் அவர்களிடம் உரையாடும் போது 'தருமையாதீனம் அனுபூதிமான்கள் நிறைந்த இடம்' என்று குறிப்பிட்டதாகச் சொல்லக் கேட்டிருக்கிறோம். இத்தகைய சிறப்புக்கள் பலவற்றையும் பெற்ற நமது தருமையாதீனத்தில் சைவசித்தாந்த பண்பாட்டுஆய்வுக்கழகம்தொடங்குவதுஎல்லா வகையிலும் திருவருட் பொருத்தமாகவே அமைந்துள்ளது.

ஆய்வாளர் கடமை :

சைவ சித்தாந்தம், ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட பொருள்கள் இறை உயிர் தளை என்று மூன்று வகைப்படும். இம்மூன்று பொருள்களில் எல்லா ஆய்வுகளும் அடங்கிவிடும். இறை – கடவுள். கடவுள் எந்நிலையில் இருக்கிறாரோ அந்நிலையிலேயே நாம் செய்ய முற்படும் ஆய்வும் அடங்குதல் இயல்பாக அமைகிறது. 'ஐயாயெனஓங்கிஆழ்ந்துஅகன்றநுண்ணியனாக' விளங்குகிறான் இறைவன் என மணிவாசகர் கூறுகிறார். ஆய்வாளரும் அதுபோல உயர்ந்த கொள்கையும், ஆழ்ந்த சிந்தனையும், பரந்த மனப்பான்மையும் நுண்ணிய உணர்வும் உடையவர்களாய் விளங்குதல் வேண்டும். நெறியாக உண்மையாக ஆய்வு செய்யத் தலைப்படுவோர் எல்லாச் சமயங்களும் நாட்டு மக்களுக்கு நல்லன செய்யத் தோன்றியனவே என்னும் கருத்துடையவராயிருப்பர். 'எல்லாச்சொல்லும் பொருள் குறித்தனவே' என்றொரு நூற்பா தொல்காப்பியத்திலுள்ளது. 'பொருள் குறிப்பனவே சொற்கள். பொருளுணர்த்தாதன சொற்களாகா' என்பது அச்சூத்திரத்தின் கருத்தாகும். அதுபோல எல்லாச் சமயங்களும் ஏதேனும் சில உண்மைகளை நன்மைகளை மக்கட்கு உணர்த்துதற்கு எழுந்தனவேயாகும். அவ்வாறுணர்த்தாதன சமயம் என்ற பெயர் பெறா என்ற உண்மை நோக்கத்தோடு அவற்றை அணுகி அவற்றின் உண்மைகளைக் கண்டு அனைத்துச் சமயங்களையும் அரவணைத்துச் செல்லுவதுதான் ஆய்வறிஞர்களுக்கும் அனுபூதிமான்களுக்கும் ஏற்புடைய செயலாகும்.

சமயப் பொது நோக்கு :-

எல்லாச் சமயங்களுக்கும் அடிப்படையாகவும், எல்லாச் சமயங்களையும் அரவணைப்பதாகவும், எல்லாத்தத்துவங்களையும் இணைத்து ஆய்வதாகவுமுள்ள ஒருமையமாக சைவ சித்தாந்தம் விளங்குகிறது என்பதை ஐன்ஸ்டீன், சர்ஜான் மார்ஷல் போன்ற மேலைநாட்டு ஆய்வு அறிஞர்களும், திரு. வி. க, என். ஆர். பட் போன்ற இந்நாட்டு ஆய்வறிஞர்களும் கூறுவது கண்டும் இதனை நாம் தெளியலாம். நம்முடைய சைவசித்தாந்த ஆசிரியப் பெருமக்களும் எல்லாச் சமய தத்துவங்களையும் ஒத்துக் கொண்டு அவற்றிற்கும் மேலான சில பல உண்மைகளைத் தம் நூலுள் உணர்த்துகிறார்கள். சிவஞானபோதம், சிவஞான சித்தியார், சிவப்பிரகாசம் ஆகிய நூல்களைக்கற்று உணர்ந்தோர் அனைத்துச் சமயங்களையும் படி நிலைகளாகக்கொண்டு அவற்றுக்கும் மேலான உண்மைகளைச் சைவசித்தாந்தம் விளக்குகிறது என்றே கூறுகின்றனர். இவற்றை மனத்தில் கொண்டு ஆய்வறிஞர்கள் பிறசமயங்களை நடுநிலை பிறழாமல் காழ்ப்பின்றி ஆய்வு செய்து அவற்றின் உண்மைகளையும் மக்கட்கு எடுத்துக் கூறும் நற்பணியை இம்மையத்தின் வாயிலாகச் செய்வதையே இக்கழகம் தன் சீரிய கொள்கையாகக் கொண்டுள்ளது.

ஆய்வுத் திட்டங்கள் :-

இம்மையத்தின் மூலம் சமய உலகிற்கு நாம் வழங்க எண்ணும் சில திட்டங்களாவன.

சமயநூல்களின் ஆய்வடங்கல், அதாவது சமய, தத்துவ நூல்களின் பெயர்ப்பட்டியல், சமயத்துறையில் வழங்கும்சைவ சித்தாந்தப் பரிபாஷைச் சொல்லகராதி, கலைக் களஞ்சியம் இவற்றைத் தயாரித்தல் இம்மையத்தின் முதற்பணியாகும். இந்து மதத்திற்கு அடிப்படையாக உள்ள வேதங்கள், உபநிடதங்கள், ஆகமங்கள், பதினெண்புராணங்கள், இராமாயணம், பாரதம் ஆகிய இதிகாசங்கள் திருமுறைகள் திவ்ய பிரபந்தங்கள் ஆகியவற்றை ஆராய்தல். ஆய்வைப் பலமொழிகளிலும் வெளியிடுதல், தத்துவத்துறையில் எம். ஏ. பட்டம் பெற்றவர்களை ஆய்வு மாணவர்களாகக் கொண்டு ஆய்வு செய்யப் பயிற்சியளித்து பி. எச்டி, பட்டம் பெறச்செய்தல், இதற்கேற்ற வகையில் இம்மையத்தை திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழகத்துடன் இணைத்தல், எல்லோரும் பயன்பெறும் வகையில் அஞ்சல்மூலம் தத்துவபோதனை வகுப்பு நடத்துதல்.

சைவ சமய நூல்களேயன்றிப் பிறசமயங்கட்குரிய ஆகமங்கள் தத்துவ நூல்கள் சமய இலக்கியங்கள் முதலியவற்றையும் ஆராய்தல்.

சைவ சமய தத்துவங்களைப் பிற சமய தத்துவங்களோடு இணைத்து ஆய்தல் அவற்றிலிருந்து சைவம் பொது வகையில் ஏற்றுக்கொண்டுள்ள உண்மைகளையும் சிறப்புத்தன்மையாக மேற்கொண்டுள்ள தத்துவ உண்மைகளையும் ஆய்வு செய்து வெளியிடுதல்,

அகத்தியம், தொல்காப்பியம் போன்ற தமிழ் இலக்கணங்கள், பாணினியம் போன்ற வடமொழி இலக்கண நூல்கள், சங்க இலக்கியங்கள், காப்பியங்கள், பிற்காலப் பிரபந்த இலக்கியங்கள் முதலியன சமயத்துக்கும் சமுதாயத்துக்கும் உதவும் முறைகளை ஆய்வு செய்தல்;

மொகஞ்சதாரோ ஹரப்பா முதலிய இடங்களை அகழ்வாராய்ச்சிசெய்து அறிஞர் வெளியிட்ட கருத்துக்களை ஆய்வு செய்து உண்மைகாண்டல்.

கல்வெட்டுக்கள், செப்புப்பட்டயங்கள் ஓலைச்சுவடிகள் ஆகியவற்றைத் தொகுத்து நம் சமயத்துறைக்கும் தத்துவத் துறைக்கும் பயன்படும் செய்திகளைத் திரட்டுதல்.

சிற்பம், சித்திரம் நாட்டியம் முதலிய கலைகளில் நமது சமய தத்துவ மரபுகள் ஊடுருவிநிற்றலை வெளிப்படுத்தல்.

சித்த மருத்துவக்கலை, வானநூற்கலை ஆகியவற்றை ஆராய்ந்து அறிந்து உணர்த்துதல். வானநூற்கலையுள் அரிச்சுவடியாகிய பஞ்சாங்கத்தை வளர்த்து வளப்படுத்துதல்.

யோகமுறைகள் தியானமுறைகள் மக்கள் வாழ்க்கைக்கு எந்த அளவில் நன்மைகள் விளைக்கின்றன என்பதையும் சமயச்சடங்குகள், ஒழுக்கங்கள், மக்களுக்கு நன்மைசெய்யும் முறைகளையும் தற்கால அறிவியல் முறைகளோடு ஒப்பிட்டு ஆய்வுசெய்து வெளியிடல்; மேற்சொல்லியுள்ள பணிகளை இம்மையத்தின்வாயிலாக நாம் தொடர்ந்துசெய்யலாம்.

மக்கள் பங்கு :

சமய உலகிற்கு இந்த ஆய்வு மையம் மாபெரும் பணியைச் செய்ய முன்வந்துள்ளது. இதற்குப் பெரும்பொருள் செலவாகும். இது கோடிக்கணக்கில் முதலீடுசெய்து தொடங்க

வேண்டிய நற்பணியாகும். இருப்பினும் நம்மால் இயன்ற அளவில் 'சிறுகக் கட்டிப் பெருக வாழ்' என்ற பழமொழிக் கிணங்க நம்முடைய ஸ்தாபனத்தில் எந்த அளவு செய்ய முடியுமோ அந்த அளவில் இதனைத் தொடங்கியுள்ளோம். சமயம், தத்துவம், சமுதாயம் இவற்றுக்குப் பணியாற்ற முன் வந்துள்ள இந்நிறுவனத்தை; சமய தத்துவ சமுதாய அறநிறு வனங்கள் இதனுடன் இணைந்து எவ்வளவுக்கெவ்வளவு ஆதரவு செய்யமுடியுமோ அவ்வளவுக்கவ்வளவு இம்மையமும் வளர்ச்சி யுறும், இதன் வளர்ச்சி நமது நாட்டின் வளர்ச்சி. முடிவில் இது உலகத்தின் வளர்ச்சியாகவும் பரிணமிக்கும். இம்மாதிரியான ஆய்வு நிறுவனங்கள் பொருளால்மட்டும் வளராது. பொருளு டையோர் பொருள்துறையிலும், அருளுடையோர் அருள்துறை யிலும், அறிவுத்துறையில் மேம்பட்டோர் அறிவுத் துறையிலும் ஆட்சித்துறையில் உள்ளோர் ஆட்சித்துறையிலும், நேசித்துப் பணியாற்றுவதாலேயே இம்மையத்தின் உண்மைப் பயன் பெருகி விளையும். எந்த அளவிற்கு நம் முயற்சியும் உழைப்பும் இருக்கிறதோ அந்த அளவிற்குப் பயனும் மிகுதியாகும். பொரு ளாதாரத்துறையில் நம் சமய நிறுவனங்கள், திருக்கோயில்கள். அறநிலையங்கள் இம்மையத்திற்கு உதவிகள் செய்யலாம், இதற்கு அறநிலய இலாகா மனம் உவந்து பேருதவி செய்யலாம். அரசும் உதவலாம். இது பாரதி நூற்றாண்டு. அவர் விடுக்கும் வேண்டுகோள் ஒன்றையே இங்கு நாம்தெரிவிப்பது பொருந்தும் எனக் கருதுகிறோம்.

நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்
நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்
ஆண்மையாளர்கள் உழைப்பினை நல்கீர்
அதுவுமற்றவர் வாய்ச் சொல் அருளீர்.

என்பது அவர்தம் அருள்வாக்கு. அவ்வாக்கிற்கிணங்கப் பலரும் தம்மால் இயன்ற ஒத்துழைப்புக்களை நல்கினால் இம்மையம் ஒரு தத்துவப் பல்கலைக் கழகமாக வளர்ந்தோங்கும்நிலை உருவாகும். இந்நிலை உருவாக, எல்லோரும் இதுபற்றிச் சிந்தித்துச் செயல்பட, எல்லோரும் எல்லா நலமும்பெற ஸ்ரீ செந்தமிழ்ச்சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

வாழ்க சமய தத்துவக்கலை.

வளர்க மக்கள் பண்பாடு.

சைவம்

டாக்டர் திரு. மு. அருணாசலம் எம். ஏ.,

சைவம் : 'சென்று நாம் சிறு தெய்வம் சேர்வோமல்லோம், சிவபெருமான் திருவடியே சேரப்பெற்றோம்' என்னும் பெருமித உணர்வோடு சிவபெருமான் திருவடிக்கே பதித்த நெஞ்சோடு வாழ்வதையே – சைவம் முதன்மையாகப் பேசும். எனவே சைவம் சிவசம்பந்தமானது. இதற்குச் சிவனோடு உறவு கொண்டு வாழ்வது என்பது பொருள். அவ்வுறவும் அடிமை உணர்வே. 'அடிமை' இங்குச் சமுதாய நிலையில் நாம் கருதும் இழிநிலையன்று; இவ்வுலகில் பெருமிதத்தோடு வாழும் உயரிய நிலை; தெய்விகநிலை. இதனை அப்பர் சுவாமிகள்,

நாமார்க்கும் குடியல்லோம் நமனை யஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம் நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம்
இன்பமே எந்நாளும் துன்ப மில்லை
தாமார்க்கும் குடியல்லாத் தன்மை யான
சங்கரன்நற் சங்கவெண் குழைஓர் காதில்
கோமாற்கே நாம்என்றும் மீளா ஆளாய்க்
கொய்ம்மலர்ச்சே வடியிணையே குறுகினோமே.

எனப்பாடுவர். 'கோமாற்கே நாம் என்றும் மீளா ஆள்' என்னும் போது, என்றும் நாம சிவன் அடிமை (ஆள்) என்பதை பெருமிதத்தோடு உணர்ந்து வாழவேண்டுவதையே குறிப்பிடுகிறார். இதனைப் பிறிதொருவகையில் கூறுவதென்றால் நாம் அவனுக்கு அடிமைச் சாசனம் – ஆவணம் எழுதப்பட்டவர்கள் என்று கூறலாம். இதனையும் நம் சைவ சமயகுரவர்கள்,

'ஆவணத்தால் அன்றென்னை ஆட்கொண்டான்காண்'

— அப்பர்.

'ஆவணம் கொண்டு எமை ஆள்வர்' — சம்பந்தர்.

எனப்பாடுவர். இவ்வடிமைச் சாசனம், சுந்தரர் வாழ்க்கையில் ஒரு வரலாற்று நிகழ்ச்சியாகவும் உள்ளது. சிவனுக்கு அடிமை

என்பதை மறந்து உலகியல் இன்பத்தில் திளைக்க முயன்ற போது, திருமண வாழ்க்கையில் தலைப்படச் சென்றபோது, சிவபிரானே மனிதக் கோலத்தில் எழுந்தருளிவந்து ஓலை – ஆவணம் – காட்டி ஆட்கொண்டான் என்பது சுந்தரர் வரலாறு.

'அன்றுவந்தெனை அகலிடத்தவர்முன், ஆளதாக என்றுவணம் [காட்டி
நின்று வெண்ணெய் நல்லூர் மிசையொளித்த நித்திலத்திரள் [தொத்தினை முத்திக்கு
ஒன்றினான்தனை உம்பர்பிரானை உயரும்வல்லரணம் கெடச்சீறும்
குன்ற வில்லியை மெல்லியலுடனே கோலக்காவினிற் கண்டு [கொண்டேனே'

எனச்சுந்தரரே இதனைப் பாடுவர்: தேவார ஆசிரியர்களேயன்றி, அவர்களுக்கு முன்வாழ்ந்த திருமூலரும் இவ்வுண்மையினை

'என்தாயோடு என்னப்பன் ஏழேழ் பிறவியும்
அன்றே சிவனுக்கு எழுதிய ஆவணம்
ஒன்றாய் உலகம் படைத்தான் எழுதினான்
நின்றான் முகில்வண்ணன் நேரெழுத்தாயே' 1839

எனத் தெளிவாகக் கூறுவர். நாம் சிவனுக்கு அடிமைச் சாசனம் எழுதப் பட்டவர்கள்; இது நம்மைப் படைத்த பிரமனே எழுதியது; இச் சாசனத்துக்கும் நம்மைக்காத்துவரும் திருமாலே சாட்சியாகக் கையொப்பம் இட்டுள்ளார் என்பது இப்பாடலின் பொருள்.

இவ்வாறு கூறுவதன்மூலம் நம் வாழ்க்கையில் சிவன் உணர்வு – தெய்வ உணர்வு – மேலோங்கிநிற்க, 'நான்' என்ற உணர்வு அடங்கிநிற்க வாழும் தெய்வீக வாழ்க்கையே வற்புறுத்தப்படுவது. இவ்வாழ்க்கையே, இவ்வுலகில் ஒருவனுக்குப் பெருமிதத்தை, நல்வாழ்வைத் தரவல்லது; இறுதி இலட்சியத்தை நோக்கிச் செலுத்தவல்லது. (இந்தப்பூமியில் எவர்க்கும் இனிஅடிமைசெய்யோம்; பரிபூரணனுக்கே அடிமை செய்து வாழ்வோம் என்னும் பாரதியார் பாட்டிலும் இப்பெருமிதத்தைக் காணலாம்.)

நாம் சிவனுக்கு அடிமையாகிச் சிறக்கும்போது நம் வாழ்க்கை முழுமை அடைகிறது அவனுக்கு அடிமையாதல் என்னும்போது 'நம் இச்சை என்ற ஒன்றில்லை; எல்லாம் சிவன் ச்சை; நம் செயல் என்ற ஒன்றில்லை; எல்லாம் சிவன் செயல்;

நம் அறிவு என்ற ஒன்றில்லை; எல்லாம் சிவன் அறிவு. என வாழ்வதையே குறிப்பிடுவர். இவ்வாறு வாழ்வதே தெய்வீக -வாழ்க்கை எனப்படுகிறது.

சிவன்முதலே யன்றி முதலில்லை என்றும்
சிவனுடைய தென்னறிவ தென்றும் - சிவனவனது
என்செயல தாகின்ற தென்றும் இவையிற்றைத்
தன்செயலாக் கொள்ளாமை தான்.

— திருக்களிற்றுப்படியார் 64·

மேலும்,

நம்செய லற்றிந்த நாமற்ற பின்நாதன்
தன்செயல் தானேஎன் றுந்தீபற
தன்னையே தந்தான்என் றுந்தீபற. — திருவுந்தியார் 6.

எனச் சைவ சாத்திரங்கள் கூறும்.

அன்றே என்றன் ஆவியும் உடலும் உடைமை எல்லாமும்
குன்றே யனையாய்என்னை ஆட்கொண்ட போதே கொண்டிலையோ
இன்றோர் இடுக்கண் எனக்குண்டோ எண்டோள் முக்கண்
[எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானோ இதற்கு நாயகமே.

— குழைத்தபத்து 7.

மணிவாசகர்குறிப்பிடும் இத்தகைய தெய்விகவாழ்க்கையே, சைவ வாழ்க்கை. இத்தகுவாழ்க்கையை நாம் மேற்கொள்வதன் விளைவாகத் தோல்வி உணர்வோ, கோழைத்தனமோ நம்மை மெலியச்செய்வதில்லை ; நமக்கு வலிமைதரும். ஆற்றல் மிக்க வீரவாழ்வில் தலைபடுகிறோம். இதனாலேயே சிவனடியார்களை 'வீரர்' எனக் கூறும் வழக்கும் ஏற்பட்டது.

ஆரம் கண்டிகை, ஆடையும் கந்தையே
பாரம் ஈசன் பணியல தொன்றிலார்
ஈர அன்பினர் யாதும் குறைவிலார்
'வீரம் என்னால் விளம்பும் தகையதோ'

என்பது சேக்கிழார் சுவாமிகள் திருவாக்கு.

இத்தகைய வாழ்க்கையை முன் வைத்து வாழ்வதே சைவர்கள் நோக்கம். சிவனுக்கு அடியவனாகநின்று தொண்டு

செய்து வாழவேண்டும் என்ற எண்ணத்தோடேயே அப்பெருமானுக்குத் திருக்கோவில் எடுத்தனர். இந்தியநாடெங்கும் அப்பெருமான் திருக்கோவில்கள் பரவலாக உள்ளன. இந்திய நாட்டில் திருக்கோவில் யாத்திரை செய்வோரைக் கவர்வன காசி, இராமேச்சுரம்போன்றதிருப்பதிகள். சிவபிரானே காசியில் விசுவநாதனுகவும் இராமேச்சுரத்தில் இராமநாதனுகவும் எழுந்தருளியுள்ளான். இந்தியநாட்டின் வட எல்லையாகிய இமயத்தில் கைலாசபதியாக எழுந்தருளியுள்ளான். மக்கள் வழிபட்டுய்ய இயற்கையே கோவில் எடுத்துள்ளதுபோன்றுள்ளது திருக்கயிலே. பல ஊர்களிலும் அப்பெருமானுக்கு மிகப்பழங்காலத்திலிருந்தே கோவில்கள் பல தோன்றின. அப்பெருமானுக்கு எடுத்த ஆலயங்கள் மகாதேவர் ஆலயங்கள் என வழங்கப்பட்டன. இவ்வாலயங்களில் சிதம்பரமே சைவர்களேப் பெரிதும் கவர்வது.

திருக்கோவில்வழிபாட்டில் அவன்திருவுருவைப்பிரதிட்டை செய்து பூசித்தல், அவனுக்குத் தொண்டுசெய்தலே; கோவில் எடுத்தல்; கோவில் பூசைக்கு உதவியாக இருத்தலும் தொண்டே; அவன் நாமத்தை ஒலித்தல்; அவன் மந்திரத்தை உச்சரித்தலும் தொண்டே; அப்பெருமானே மனத்தே தியானித்தலும் ; அப்பெருமான் 'பாவனே' யில் ஒன்றி நிற்றலும் தொண்டே. இத்தகைய தொண்டில் தலேப்பட்டு உய்ய வேண்டும் என்றே சைவம் கூறுகின்றது. இத்தகைய பல தொண்டுகளேயும் விளக்கிநிற்பதே திருத்தொண்டர் புராணம் என்னும் பெரியபுராணம்.

சிவனே 'மகாதேவன்' என்பதை அவன் திருக்கோவில் உணர்த்தும். மகாதேவர் ஆலயங்களில் '*சிவலிங்கமே*' முதன்மைத் தெய்வமாகப் பிரதிட்டிக்கப்பெற்றிருக்கும்; விநாயகர், சுப்பிரமணியர், தேவி, திருமால் போன்ற திருக்கோலங்கள் சுற்றுத்தெய்வங்களாக, பரிவார தெய்வங்களாகவே அமைந்திருக்கும். இத்திருக்கோலங்களும், சைவ நூற்களில் (புராணங்களில்) அப்பெருமானேடு உறவு முறையிலேயே விளக்கப்படும். விநாயகர், சுப்பிரமணியர் அவன் மக்கள்; தேவி அவன் துணேவி; நாராயணன் தேவியின் சகோதரன் என்ற அளவில் விளக்குவர். இவ்வுறவோடு, இத்தெய்வத் திருக்கோலங்களேச் சிவசொருபமாகக்கண்டு வழிபடுவதும் உண்டு. சிவனே — விநாயகர் வடிவில் உள்ளார் எனக்கொண்டதாலேயே விநாயகரைப் பாடிய சில தோத்திரங்கள் சைவத் திருமுறைகளில் இடம்பெற்றுள்ளன. முருகனும் 'சிவனே' எனக் கந்தபுராணம்

கூறும்; அவனைப்பற்றிய பாடல்களும் சைவத் திருமுறையில் உண்டு; தேவியைச் சிவசக்தியாகக் கூறுவதைப் பல நூற்களிலும் காணலாம். நாராயணனும் சிவன் சக்தியே என்பதைத் தான் 'சங்கரநாராயணன்' என்னும் வழக்கும், 'அரியலால் தேவியில்லை ஐயன் ஐயாறனுக்கே' என்னும் தேவாரமும் உணர்த்தும். சூரியனையும் பரிவார தெய்வமாகக்கொண்டு சைவக் கோவிலில் பிரதிட்டை செய்துள்ளனர்; சூரியனையும் சிவசொருபமாகக் கொள்வதுண்டு,

அருக்கன் பாதம் வணங்குவர் அந்தியில்
அருக்க னுவான் அரன்உரு அல்லனோ
இருக்கு நான்மறை ஈசனையே தொழும்
கருத்தினை நினையார் கன்ம னவரே.

என்பது தேவாரம்.

இந்துக்கள் வழிபடும் தெய்வத் திருக்கோலங்களை எல்லாம் சைவம் ஏற்றுத் தன்நெறிக்குள் கொண்டிருப்பினும், அந்நெறிக்கு அடிப்படைநூற்களாக அனைத்தையும்கொள்வதில்லை. இந்துக்கள் அனைவரும் ஏற்றுக்கொண்டுள்ள வேதங்களைப் பொது நிலையிலும், தங்களுக்கே உரித்தான சிவாகமங்களைச் சிறப்பு நிலையிலும் கொள்ளும்.

வேதநூல் சைவநூல்என் றிரண்டே நூல்கள்
வேறுரைக்கும் நூல்இவற்றின் விரிந்த நூல்கள்
ஆதிநூல், அநாதியம லன்தருநூல், இரண்டும்
ஆரணநூல் பொது, சைவம் அருஞ்சிறப்பு நூலாம்
நீதியினுல் உலகர்க்கும் சத்திநிபா தர்க்கும்
நிகழ்த்தியது நீண்மறையின் ஒழிபொருள்வே தாந்தத்
தீதில்பொருள் கொண்டுரைக்கும் நூல்சைவம் பிறநூல்
திகழ்பூர்வம் சிவாகமங்கள் சித்தாந்த மாகும்.

— சித்தியார். 15.

இங்குச் சைவநூல் – சிவாகமங்கள். இவற்றைச் சிறப்பான நூலாகக் கருதி. இவை வகுத்த நெறிவழியே சிவத்தொண்டு செய்துவந்தால், சிவானுபவம், தெய்வீகஇன்பம், ஒருவனுக்குக் கிட்டும் என்பதே சிவநெறிக்கோட்பாடு.

இந்நெறியினைப் பெரும் நம்பிக்கையோடு, உறுதியோடு மேற்கொண்டு ஒழுகின் உய்வதற்கும் வழிகூடும்.

சித்தாந்தத் தேசிவன்தன் திருக்கடைக்கண் சேர்த்திச்
 சென்னம் ஒன்றி லேசீவன் முத்தராக
வைத்தாண்டு மலங்கழுவி ஞான வாரி
 மடுத்தானந் தம்பொழிந்து வரும்பிறப்பை அறுத்து
முத்தாந்தப் பாதமலர்க் கீழ்வைப்பன் என்று
 மொழிந்திடவும் உலகரெலாம் மூர்க்க ராகிப்
பித்தாந்தப் பெரும் பிதற்றுப் பிதற்றிப் பாவப்
 பெருங்குழியில் விழ்ந்திடுவர் இது என்ன பிராந்தி.

— சித்தியார். 16.

சிவாகமநெறியில் வாழ்வோர்க்குச் சிவபெருமான், நாம் எடுத்துள்ளபிறப்பிலேயே, அருள்பொழிந்து, ஆன்மஅழுக்கைப் போக்கி, சிவஞானத்தைத்தந்து சீவன்முக்தர் ஆக்கி, மேல்வரும் பிறப்பை அகற்றிப் பின் திருவடிக்கீழ் ஏற்றுக்கொள்வான் என்பது அருணந்திசிவத்தின் திருவாக்கு. இங்கு நாம் எடுத்துள்ள பிறவியிலேயே சிவானுபவம் பெற்றுவிடமுடியும் என்ற நம்பிக்கையினை வெளிப்படுத்தக் காண்கிறோம். இதனால் சிவபரம் பொருளுக்குத் தொண்டனாகவிருந்து இவ்வுலகில் ஆற்றல்மிக்க வாழ்க்கை வாழ்ந்து, இறுதியில் சிவானுபவத்தில் திளைத்தலையே சைவம் நமக்கு உணர்த்துகிறது என்பது நன்கு விளங்கும்.

இதனையே மணிவாசகப் பெருமானும், பின்வரும் பாடலால் உணர்த்துகிறார்.

" அழிவின்றி நின்றதோர் ஆனந்த வெள்ளத்திடை அழுத்திக்
கழிவில் கருணையைக் காட்டிக் கடியவினை அகற்றிப்
பழமலம் பற்றறுத்து ஆண்டவன் பாண்டிப்பெரும்பதமே
முழுதுலகும் தருவான் கொடையே சென்று முந்துமினே"

மக்களே! வாருங்கள்; உங்களுக்கு ஐயம்வேண்டிதில்லை. சிவானந்த வெள்ளத்தில் திளைக்கலாம்; பெருமான் கருணை செய்வான்; வினைத்துன்பம் பற்றிய கவலை வேண்டாம்; அவனருளால் வினை அகலும்; அதற்குஅடிப்படையான ஆன்ம அழுக்கும் நீங்கும். அவன் திருவடியைச் சென்றடைந்தால் உலகனைத்தும் உங்களுடையதே என்று நம்பிக்கையோடு உங்களைச் சிவன்பால் ஆற்றுப்படுத்துவதும் இங்குக் குறிப்பிடத் தக்கது.

திருக்கைச்சினத் தலச்சிறப்புக்கள்

தருமையாதீனத் தமிழ்ப்புலவர், திருவாசக உரைமணி,

வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ.,

சோழநாட்டுக் காவிரித்தென்கரைத் திருத்தலங்களில் 122 ஆவதாக எண்ணப்படுவது திருக்கைச்சினம். இதுகச்சனம் என வழங்கப்படுகிறது. இவ்வூர் தஞ்சை மாவட்டம் திருத்துறைப் பூண்டி வட்டத்தைச் சேர்ந்தது. திருவாரூர்–திருத்துறைப்பூண்டி பேருந்துச்சாலையிலுள்ளது. திருக்கோயில் மதுரை ஆதீன அருளாட்சிக்கு உட்பட்டது.

திருவாரூருக்குத் தெற்கே 25 கி. மீ. தூரத்திலும் திருத்துறைப் பூண்டிக்கு வடக்கே 11கி. மீ. தூரத்திலும்உள்ள இத்தலத்துக்கு திருவாரூர், நாகை, திருத்துறைப்பூண்டி ஆகிய ஊர்களிலிருந்து பேருந்துகளில் வரலாம். புகைவண்டியில் வருவோர் அம்மனூர் நிலையத்தில் இறங்கிக் கிழக்கே 3 கி. மீ. தூரம் வரவேண்டும்.

இத்தலத்துக்குக் கோங்கிலவு தலமரமாதலின் கோங்கு வனம், கர்ணிகாரவனம் என்ற பெயர்கள் உள்ளன.

தலப்பெருமை :

இத்தலம் மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றாலும் பெருமை பெற்றது. இந்திரன், அகத்தியர், திருணபிந்துமுனிவர், விதூமன் மித்ரசகன் முதலியோர் வழிபட்டுப் பேறுபெற்ற பெருமை உடையது. கௌதமமுனிவரால் இந்திரனுக்கு நேர்ந்த சாபம் விலகியது. அகத்தியருக்குப் பிரமகத்தி நீங்கியது. இந்திரன் மணலினால் இலிங்கம் செய்து பூசித்த பின் அதனை எடுக்க முயன்றபோது இந்திரனுடைய கைச்சின்னம் அவ்விங்கத்தில் பதிந்த காரணத்தால் இறைவன் கைச்சின்னநாதர் எனப் பெற்றார். தலமும்கைச்சின்னம் எனப்பெற்றுக் கச்சினம்கச்சனம் என மருவி வழங்கப்படுகிறது. இந்திரனால் வழிபடப்பட்ட மூலவரும் ஐராவதயானையின் கொம்பினால்செய்த வளையல் அணிந்த வெள்வளைநாயகி அம்மையும் இத்தலத்தில் எழுந்தருளி யுள்ளனர். இந்திரனுக்குத் தியாகராசர் காட்சிகொடுத்தபெருமை உடையது.

இந்திரனது வச்சிராயுதத்தால் வெட்டப்பட்ட வச்சிர தீர்த்தமும், இந்திர தீர்த்தமும், அகத்திய முனிவரின் கமண்டல நீரால் ஆக்கப்பெற்ற தீர்த்தமும் உள்ளன. இக்கோயில் யானை ஏறுதபடி கட்டப்பட்ட மாடக்கோயில்.

திருஞானசம்பந்தர் அருளிய திருப்பதிகம் ஒன்றையும் திருநாவுக்கரசர் அருளிய க்ஷேத்திரக்கோவைத்திருத்தாண்டகப் பாடல் ஒன்றையும் பெற்றது.

சூழ உள்ள தலங்கள் :

இத்தலத்துக்குக் கிழக்கே திருக்கோளிலியும் எட்டிக்குடியும் திருவலிவலமும் உள்ளன. மேற்கே திருநெல்லிக்காவும் வடக்கே திருக்காறுயிலும் உள்ளன.

கோயிலமைப்பு :

இத்தலக்கோயில் கோச்செங்கட்சோழமன்னர் கட்டிய மாடக்கோயில்களுள் ஒன்று. கிழக்கு நோக்கிய சந்நிதி. மூன்று நிலைகளை உடைய இராஜகோபுரத்துடன் அழகுற விளங்குகிறது ஆலயம். மதுரை ஆதீனத்தின் பரிபாலனத்துக்குட்பட்டது. இரண்டு பிராகாரங்கள் உள்ளன. உள்பிராகாரத்தில் மேற்கே விநாயகர், விதூமலிங்கம், சுப்பிரமணியர், அம்மன் சந்நிதிகளும், கிழக்கில் நடராசர் மண்டபமும் உள்ளன. இடபாரூடராக விளங்கும் தென்முகப் பெருமானும், அர்த்தநாரீசுரரும் தரிசித் தற்குரிய மூர்த்திகளாக விளங்குகின்றனர். உள்மண்டபம் மேடைபோல விளங்குகிறது. அம்பாள் கோயிலுக்குப்பக்கத்தில் தலமரமாகிய கோங்கிலவம் உள்ளது.

கோயிலின் நடுவில் மூலவரும் அருகில் தியாகராஜரும் ஏனைய உற்சவ மூர்த்திகளும் உள்ளனர். கோபுரவாயிலுக்கு எதிரில் நந்திதேவர் விளங்குகிறார். வடக்கே இந்திர தீர்த்தமும் தெற்கில் வச்சிர தீர்த்தமும் உள்ளன.

மூர்த்திகள் :

இறைவன் திருபெயர் அருள்மிகு கைச்சின்னநாதர். வட மொழியில் கரசின்னேசுவரர் என வழங்குகின்றனர். இறைவன் திருமேனியில் இந்திரனது கைச்சின்னம் பதிந்த காரணத்தால் இப்பெயர் வழங்கலாயிற்று எனக்கூறுகிறது தலபுராணம். இறைவன் திருமுடியில் இந்திரனின் கைவிரல் அடையாளம் உள்ளது. அம்பிகை திருப்பெயர் அருள்மிகு வெள்வளைநாயகி.

வடமொழியில் சுவேதவளைநாயகி என்பர். இந்திரன் ஐராவதத்தின்தந்தத்தால்செய்த வெள்வளையை அணிவித்துவழிபட்டதால் அம்பிகை இப்பெயர் பெற்றார் எனக்கூறுவர். திருஞானசம்பந்தர் இத்தலத் தேவாரத்தில் 'வெள்வளையோர் கூறுடையான்' என்று கூறியுள்ளார். கல்வெட்டுக்களில் பெருமான்கோங்குவனேசுவர சுவாமி, திருக்கைச்சினம் உடைய நாயனர், கரச்சின்னேசுவரர் என்ற பெயர்கள் காணப்படுகின்றன. சிறப்புடைய திருவுலா மூர்த்தி இந்திரனுக்குக் காட்சிக்கொடுத்த தியாகேசர். தலமரம் கோங்கு. தீர்த்தம் வச்சிரதீர்த்தம், இந்திரதீர்த்தம் ஆகியன.

புராண வரலாறுகள்

இந்திரன் கைச்சின்னம் பதிந்த வரலாறு :

இந்திரன் கௌதமமுனிவரின்மனைவி அகலிகையின் அருகில் மயங்கி நடுயாமத்தே முனிவரது ஆசிரமத்துக்கு அருகே சென்று காக்கை வடிவம் கொண்டு கரைந்தான். முனிவர் பொழுது விடிந்தது என்று எண்ணி நீராடச் சென்றார். அப்போதுமுனிவர் வடிவில் சென்று அகலிகையை இந்திரன் மருவினன். முனிவர் யோகக் காட்சியால் இந்திரனது வஞ்சகச் செயலை அறிந்தார். இந்திரன் உடல்முழுவதும் ஆயிரம் பெண்குறிகள் தோன்றி அவமானமுறுமாறும் அகலிகை கல்லாகுமாறும் சபித்தார். இந்திரன் தனது தீயசெயலால் தனக்கு விளைந்த அவமானத்துக்கு வெட்கி ஒருமலைக் குகையில் ஒளிந்து வாழ்ந்தான். தேவர்கள் இந்திரனைக் காணது துயருற்றனர். இந்திரன் திருவாரூரை அடைந்து தவம்செய்தான். பெருமான் கோங்கு வனம் சென்று தம்மை வழிபட்டால் குறைதீரும் என்றருளினர் இந்திரன் இத்தலத்தை அடைந்து தனது வச்சிராயுதத்தால் தீர்த்தம் உண்டாக்கி நீராடி மணலால் சிவலிங்கம் தாபித்து வழிபட்டான். வைகாசி விசாகநாள் அன்று இந்திரன் பூசை முடித்து மணல் இலிங்கத்தைக் தீர்த்தத்தில்சேர்ப்பிக்க எண்ணித் தனது கைகளால் பற்றி எடுத்தபோது இலிங்கம் பூமியில்பற்றிக் கொண்டது. இந்திரன்கைவிரல்கள் சிவலிங்கத்தில் பதிந்தன. இறைவன் இந்திரனுக்குக் காட்சி கொடுத்து அவனது குறை போக்கி அவனது உடலில் தோன்றிய குறிகளைக் கண்களாகு மாறு செய்தருளினர். இந்திரன் ஆயிரங் கண்ணுடையோன் என்ற பெயரைப் பெற்று மகிழ்ந்து வைகாசி விசாகத்தன்று இத்தலத்தில் இறைவனை வழிபடுவோர்க்கு வேண்டும் வரங்கள் அருளுமாறு வரம்பெற்றுத் தன்னுலகம் சேர்ந்தான். அதுமுதல் ஆண்டுதோறும் வைகாசி விசாகவிழா இந்திரன் நடத்தும்

இனியவிழாவாக இத்திருத்தலத்தில் நடத்தப்பெற்று வருகிறது. அன்றையநாளில் பலரும் இத்தலப்பெருமானைச் சிறப்பாகவந்து வழிபாடாற்றி அருள்பெற்று வருகின்றனர்.

அகத்தியர் வழிபட்டது :

சிவபெருமான் இமவான் மகளாகத் தோன்றி வளர்ந்த பார்வதி தேவியைத் திருமணம் கொண்டருளும் காலத்தில் திருமணம் காணவந்த தேவர்கள் முனிவர்கள் முதலியோரால் வடதிசை தாழ்ந்து தென்திசை உயர்ந்தது. பெருமான் அகத்திய முனிவரை அழைத்துத் திருமணக்கோலத்தைத் திருமறைக்காட்டில் அவருக்குக்காட்டுவதாகக்கூறிப்பொதிகைமலைசெல்லுமாறு பணித்தார். அகத்தியர் தென்திசை வரும்போது விந்தியமலையை அடைந்தார். தன்னை வஞ்சகமாகக் கொல்லவந்த வில்வலன், வாதாபி ஆகியோரைக் கொன்றார். அதனால் கொலைப்பாவம் அவரைச்சூழ்ந்தது. முனிவர் கவலைகொண்டு கோங்குவனமாகிய இத்தலத்தை அடைந்து தன் கமண்டலநீரால் தீர்த்தம் உண்டாக்கி அதில் நீராடி இறைவனை வழிபட்டார். கொலைப் பாவம் நீங்கியது. பிறகு திருமறைக்காடு சென்று இறைவனது மணவாள கோலத்தைக் கண்டு மகிழ்ந்து பொதியம் சென்றார். அகத்தியர் இத்தலத்தில்தாபித்து வழிபட்ட லிங்கம் அகத்திய லிங்கம் என்ற பெயரோடு உள்ளது.

விதூமன் வழிப்பட்டது :

விதூமன் அட்டவசுக்களில் ஒருவன். இவன்பிரமதேவன் முன்னிலையில் நடனமாடிய அலம்புசை என்னும் தேவமாதை விரும்பினான். பிரமன் இருவரையும் நிலவுலகிற் பிறந்து கணவன் மனைவியாக இன்பந்துய்க்குமாறும், கோங்குவனம் சென்று வழிபட்டால் பாவம் நீங்குமெனவும் சாபமிட்டார். விதூமன் கௌசாம்பிநகர் மன்னன் சதானிகனுக்குச் சகஸ்ரானிகன் என்ற பெயருடன் பிறந்தான். அலம்புசை அயோத்தி மன்னன் கிருதவர்மனின் மகளாக மிருகாவதி என்ற பெயரோடு பிறந்து வளர்ந்தாள். சுயம்வரம் மூலமாக சகஸ்ரானிகன் மிருகாவதியை மணந்து வாழ்ந்தான். மிருகாவதியை ஒருநாள் கருடன் ஒன்று தூக்கிச் சென்று உதயகிரியில் சேர்த்தது.

ஜமதக்கினி முனிவரின் மகன் அவளைக் கண்டு தந்தையின் ஆஸ்ரமத்தில் சேர்த்தான். மிருகாவதி அங்கே உதயணனைப் பெற்றாள். உதயணன் வளர்ந்து நாககன்னிகையை மணந்து அவள்மூலம் வாடாமாலையையும், கோடபதி என்ற யாழையும்

பெற்ருன். தன் மனைவி மகன் மருகி ஆகியோரைப் பலநாள் பிரிந்து துயருற்ற சகஸ்ரானிகன் தன்மனைவியின் இருப்பிட மறிந்து அவளையும் மகனையும் தன்நாட்டுக்கு அழைத்துவந்து உதயணனுக்கு முடிசூட்டிவிட்டுத் தன்மனைவியுடன் கோங்கு வனம்வந்து பெருமானை வழிபட்டான். இறையருளால்இருவரும் தங்கள் சுயஉருவங்களைப் பெற்றுத் தெய்வ உலகடைந்தனர். விதூமன் பூசித்தலிங்கம் அவன்பெயரால் இத்தலத்தில் விளங்கு கிறது.

மித்திரசகன் வரலாறு :

சாக்கியமலைச் சாரலில் மித்திரசகன் என்னும் அந்தணன் வாழ்ந்தான். அவனுக்கு மூன்று புதல்வர்கள். வறுமையால் மித்திரசகன் மனைவியுடன் இறந்தான். நாளடைவில் மூன்ருவது புதல்வனுகிய ஈஸ்வரன் என்பவனைத் தவிர ஏனைய மக்களும் இறந்தனர். மூன்ருவது மகன் கல்வி கேள்விகளில் வல்ல வனுய்த் துறவுபூண்டு ஈஸ்வர முனிவர் என்ற பெயரோடு இத்தலத்தை அடைந்து ஆஸ்ரமம் அமைத்துக்கொண்டு வாழ்ந்து வந்தான். பேயுருவம் பெற்றுத் தன்னைத் தொடர்ந்த விஷ்ணுசர்மா விகர்ணன் என்பவர் மீதும் உச்ஜய்னி அரசர் பந்துகீர்த்தி என்பவர்மீதும் ஈஸ்வரமுனிவர் இந்திர தீர்த்தத்தின் திவலைகளைத் தெளித்துப் பேயுரு நீக்கிப் பழைய வடிவை நல்கினர். மூவரும் கைச்சின நாதரையும் முனிவரையும் வணங்கித்தம் இருப்பிடம் சென்ருர்கள்.

கல்வெட்டு :

இக்கோயிலில் 11 கல்வெட்டுக்கள் உள்ளன. சோழருடை யது எட்டும், பாண்டியரது ஒன்றும், விஜயநகரத்தரசனது இரண்டுமாக மொத்தம் பதினென்ருகும். இராசேந்திரன் தனது 30ஆம் ஆண்டில், அதிகாலையில் இரண்டுவிளக்குகள்எரிக்கவும் மார்கழி, வைகாசி மாதங்களில் விழாக்கள் நடத்தவும் திருக் கச்சின முடையார்க்குப் பாண்டிய மண்டலத்தில் பூதானம் செய்தான். இராசராசன் காலத்தில் அரங்கன் ஆட்கொண்டான் கொடுத்த 50 காசுக்காக 3 பட்டர்கள் நுந்தாவிளக்கு வைப்ப தாக ஒப்புக் கொண்டார்கள். குலோத்துங்கன் காலத்தில் அன்னதான நங்கை அதுபோலப் பணம் கொடுத்தாள். இராசாதிராசன் காலத்தில் 100 காசுகள் பெற்றுக்கொண்டு விளக்கு வைக்கப்பட்டது. அதுபோலவே குலேத்துங்கன் நாளிலும் செய்யப்பட்டது.

பாண்டியரில் சுந்தரபாண்டியன் தனது பத்தாம் ஆண்டில் வைகாசி வசந்தோற்சவத்திற்காகப் பூதானம் செய்தான்.

விஜயநகரத்தரசர் காலத்தில் சகம் 1307 இல் கச்சினப்பற்றில் முத்தரசர் பெயரிலுள்ள ஊரின் நிலங்களில் சதுர்வேதிப் பட்டர்களின் வரி தள்ளுபடி செய்யப்பட்டது.

இத் திருக்கோயிலில் சோழ மன்னர்களில் திரிபுவனசக்கரவர்த்தி விக்கிரமசோழதேவர். திரிபுவன சக்கரவர்த்தி ராஜராஜதேவர், திரிபுவன சக்கரவர்த்தி இரண்டாம் ராஜாதிராஜ தேவர். மூன்றும் குலோத்துங்கசோழதேவர் இவர்கள் காலங்களிலும், பாண்டியரில் ஜடாவர்மன் திரிபுவன சக்கரவர்த்தி சுந்தரபாண்டியர் காலத்திலும், விஜயநகரபரம்பரையில், வீரபூபதி வீரப்பண்ண உடையார் காலத்திலும் பொறிக்கப் பெற்றுள்ள பதினொரு கல்வெட்டுக்கள் இருக்கின்றன.

இவ்வூர், இரண்டாம் இராசாதிராசன் கல்வெட்டில் இராசேந்திர சோழ வளநாட்டு ஆர்வலக்கூற்றத்துக் கச்சினம் எனவும், விசயநகரபரம்பரை வீரப்பண்ண உடையார் கல்வெட்டில், இராசேந்திர சோழ வளநாட்டு வடக்கால் வெண்டாழை வேளூர்க் கூற்றத்துக் கச்சினப் பற்று எனவும் குறிக்கப்பெற்றுள்ளது. இக்கோயிலுக்குரிய நிலங்கள் முதலாம் குலோத்துங்க சோழதேவரின் 40 ஆம் ஆட்சியாண்டில் கல்லில் வெட்டப்பட்டுள்ளன. இச்செய்தியை விக்கிரமசோழ தேவரின் 12 ஆம் ஆண்டுக் கல்வெட்டுக் குறிப்பிட்டுள்ளது. (இக்கல்வெட்டில் பெரிய தேவர் குலோத்துங்கசோழ தேவர் என்பது முதற் குலோத்துங்க சோழராகும்.)

ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் சிறுகீழூரான முடிமான் தம்பிரான் சோழ சதுர்வேதி மங்கலத்துச் சோமதேவ பட்டன் இக்கோயில் வைகாசி வசந்த விழாவிற்கு நிலம் கொடுத்திருந்தான்.

பாண்டியநாட்டு, சோழபாண்டிய மண்டலத்து, மதுரோதய வளநாட்டு, பாலைக்குறிச்சி, ஆரியன்திருமறைக்காடுஉடையான் மார்கழி, வைகாசி விழாக்களுக்கும் காலைசந்திகளுக்கும், நுந்தா விளக்குகளுக்கும், இராசேந்திரசோழதேவன் காலத்தில் நிலம் அளித்திருந்தான்.

தையலோர் கூறுடையான் தண்மதிசேர் செஞ்சடையான்
மையுலாம் மணிமிடற்றன் மறைவிளங்கு பாடலான்
நெய்யுலாம் மூவிலைவே லேந்தி நிவந்தொளிசேர்
கையுடையான் மேவியுறை கோயில் கைச்சினமே.

கட்டுரை எண். 32

அபிராமி அந்தாதி

புலவர். திரு. K. சந்தானராமன், M A., B. Lit.,
D. P. P. A,. D, U. N., I. U.

உமையும் உமையொரு பாகனும் ஏகஉருவில் வந்திங்கு
எமையும் தமக்கு அன்பு செய்ய வைத்தார்; இனி
[எண்ணுதற்குச்
சமையங்களும் இல்லை; ஈன்றெடுப்பாள் ஒருதாயுமில்லை;
அமையும் அமையுறு தோளியர் மேல்வைத்தஆசையுமே! 31

அ. உமையும்.........அன்பு செய்ய வைத்தார்.

(1) உமாதேவியும் அவ்வுமாதேவியினை இடப்பாகத்தில் கொண்ட, சிவபெருமானும் ஒரேவடிவாகி இங்கு எழுந்தருளி வந்து அடியேனையும் தமது திருவடிகளில் அன்புகொள்ளச் செய்தனர் என்பது பொதுவானபொருள்.

(2) உமையும் இறைவனும் ஒன்ருக இணைந்து அர்த்தநாரீசுவரர் வடிவத்தில் எழுந்தருளிவந்து தமது திருவடிகளுக்கு அன்புகொள்ளுமாறு செய்தனர்.

(3) பிருங்கி முனிவர் அம்பிகையினை விலக்கி இறைவனை மட்டும் வழிபட்டார். அதனுல் வருந்திய அம்பிகை திருக்கேதாரத்தில் தவமியற்றி இறைவனின் இடப்பாகத்தினைப் பெற்ருள். கௌரி கடைப்பிடித்த அவ்விரதமே இன்றும் தாய்மார்களால் 'கேதாரகௌரி' விரதமென்று கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இது கணவனுடன் என்றும் இணைந்து வாழ்வதற்காக நோற்கும் நோன்பாகும். இதுதான் உமையொருபாகனுகிய வரலாறு. தமிழ்நாட்டில் திருச்செங்கோட்டில் அர்த்தநாரீசுவர ' நவபாஷாணமூர்த்தியினைத் ' தரிசிக்கலாம்.

(4) உமையும் இறைவனும் இணைந்ததுபோலவே நமது உடலமைப்பும் அமைந்துள்ளது. இதுயோகநூலார்கருத்தாகும். ஆணின் இடப்பாகத்தில் பெண்மையும் பெண்ணின் வலப்பாகத்தில் ஆண்மையும் நிறைந்துள்ளது என்பர். யோகநூல் வல்லார் ஆணே பெண்ணே தான்வேண்டும் மகவினைப் பெறவியலும் என்றும் கூறுவர். பெண்களில் பெரும்பாலோர் இடப்

பாகத்தில் 'தாவணி' அல்லது 'மேலாடை'யினை அணிவதும் அப்பாகத்தில் பெண்மைநிறைந்திருப்பதனைநோக்கியே ஆகும்.

(5) பதினெட்டுமுழம் புடவை (மடிசார்) அணிவதிலும் அர்த்தநாரீசுவரத்தத்துவம் அடங்கியுள்ளதென்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கவொன்ருகும். திருமணமான பெண்ணை மாற்ருன் தெய்வமாக மதித்தல் வேண்டும். அதற்கேற்ப அவளும் இருத்தல்வேண்டும். இறைவனின் ஆடையின் 'கக்சை' ஒரு புறம், அம்பிகையின் 'பாவாடை'யின் மடிப்புகள் இன்னெரு புறம், இவை இணைந்த புடவைக்கட்டே 'மடிசார்' என்பது. அதாவது காண்பர் கண்ணுக்கு அர்த்தநாரீசவடிவமாகக்காட்சியளிக்கும் வகையில் அமைவதே மேற்படி கட்டின் நோக்கமாகும்.

(6) அம்பிகை சரிபாதியாக இருப்பினும், 'அர்த்தநாரீச்சுவரி' என்ருே 'ஈசனிருக்கும் பாதியாள்' என்ருே குறிப்பிடாது அர்த்தநாரீச்சுவரர் என்றும் மாதிருக்கும் பாதியான் என்றுமே ஆண்பால் விகுதியுடன் குறிப்பிடுதல் சிந்தித்தற்குரியது.

தனக்குப் பாலளித்த அன்னையின் தோடுடைய பகுதியை முதலில் நினைந்தாலும் சம்பந்தர் 'தோடுடைய செவியன்' என்றே இறைவனின் முதன்மை அல்லது 'சிவபரத்வம்' கருதிக் குறிப்பிடுகிருர். இது சைவநெறி.

இறைவனையும் இறைவியையும் சமமாகவே மதித்து, இருப்பிடம், செயல், பெயர் ஆகியவற்றில் ஒரேதன்மையுடையவராய் வழிபடுதல் சாக்தநெறியாகும். இருவரையும் சமமாகவே கருதும் இம்முறையினை 'ஸாம்யம்' என்பர்.

ஸாம்ய நெறிக்கேற்ப இவ்விடத்தில் பட்டர், "ஏகவுருவில் வந்து இங்குத் தமக்கு அன்புசெய்ய வைத்தார்" என்கிருர். 'வைத்தார்' என்பதில்வரும் விகுதி ஆண்பால் ஒருமைக்கும் பெண்பால் ஒருமைக்கும் பொதுவானது ஆகும். "சுப்ரமணியர் வந்தார்" எனவும், "வள்ளிநாயகியார் வந்தார்" எனவும் கூறுகிருேம் அல்லவா? 'தமக்கு' என்பதும் அவ்வாறே பொதுவானதாகும். ஸாம்யத்தை யுணர்த்துவதாகும்.

(7) இறைவனும் இறைவியும் 'அபிராமி' என்னும் ஏக உருவில் எழுந்தருளி அருள்செய்தார் எனினும் ஆம்.

(8) அவர்கள் ஒருவராய்வந்து அருள்செய்து தமக்கு அன்புசெய்யவைத்தனர். அவர்களுக்கு அன்பு செய்வதும் நம்முயற்சியாலன்றி அவர்களின் அருளாலேயே அமைகிறது. "அவனருளால் அவன்தாள்வணங்கி" என்றதுபோல! எனவே "அன்பு செய்ய வைத்தார்" என்ருர்.

(9) பிற அடியார்களையும் சேர்த்துக்கொண்டு 'எமையும்' என்றார் என்பர். அன்பு செய்யவைத்த பெருமிதம் அல்லது புலவர்க்குரிய பெருமிதம் காரணமாகவும் 'எமையும்' என்றார் எனலாம். "எளியேனாகிய என்னையும்" என்ற பொருளும் உண்டு. "நாம் ஆர்க்கும் குடியல்லோம்" என்ற அப்பரின் 'பன்மையும் எமக்குத் தொழில் கவிதை' என்ற பாரதியின் பன்மையும் இங்கு ஒப்புநோக்கத்தக்கனவாகும்.

(10) மற்றும் தன்னையே பன்மையில் கூறிக்கொள்ளும் வழக்கு அபிராமிபட்டரின் அவதார பூமியாகிய தஞ்சைத் தரணியில் நிறைய உண்டு.

" இன்று கோவிலில் 'நம்ம' கச்சேரி நடக்கிறது "

நேற்று 'நம்ம' வாசிப்பு எப்படி ?

'நம்ம' வயலில் நாளை அறுவடை ; இவை தஞ்சைமண்ணின் அன்றாட வழக்கச் சொற்கள். அத்தகையதே 'எமையும்' என்பதும்.

(11) இப்பிறவியிலேயே, இப்பூவுலகிலேயே தமக்கு அன்புசெய்ய, வைத்ததைக் குறிக்கும் வண்ணம் அமைகிறது இங்கு' என்ற சொல். ஏனெனில் இல்லறத்தின் இடர்ப்பாடுகளுக்கிடையில் இங்கு அன்புசெய்தல் என்பது அரிதான வாய்ப்பாகும் ! சிறப்பான வாய்ப்பாகும் !

(12) உமையும் உமையொருபாகனும் அர்த்தநாரியாக குண்டலினி யோகிகட்கு சகஸ்ராரத்தில் காட்சிதருவர். அவர்கள் ஏகஉருவில் அன்னாரின் காட்சியினைக் கண்டபின் ஜீவன் முக்தர்களாய் மாறிப் பிறவாநிலையினையும், புலன்களை வென்ற போராண்மை பெற்ற நிலையினையும் எய்துகின்றனர். அவற்றினை "ஈன்றெடுப்பாள் ஒருதாயுமில்லை" "அமையுறு தோளியர் மேல் வைத்த ஆசையுமே" என்ற சொற்றொடர்களில் விளக்குகிறார்.

ஆ. இனி எண்ணுதற்குச் சமயங்களுமில்லை.

(1) இனிமேல் நான் சிந்திக்கத்தக்க வேறுசமய நெறிகள் எதுவும் இல்லை. (சமயம் என்பது சமையம் என எதுகை நோக்கிப் பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளது.)

(2) ஏகவுருவில் வந்து அருள்செய்து விட்டபடியால் அவ்வூரார் எண்ணியது போல் 'துர்த்தேவதை' உபாஸனை போன்ற சமய நெறிகளை இனி எண்ண வேண்டிய அவசியமில்லை.

(3) யோக நெறியால் ஆதாரங்களிலேயும் அகக்கண்ணு லேயும் ஏகவுருவில் தரிசனம் செய்யும் பேறு கிடைத்து, அவர் தமக்கு அன்பு செய்யும் வாய்ப்பும் கிடைத்துவிட்டபிறகு வேறு வெளப்படையான சமயச் சடங்குகளும் சமய நெறிகளும் தேவையில்லை. "வேதியரொழுக்கத்தினைத் துறந்தவர்" எனக் கருதிய கரும நெஞ்சினருக்கு இது ஒரு பதிலாகும்.

(4) எச்சமய நெறியினைப் பற்றலாம் என எண்ணி ஆராய் வதும், பற்றியபின் அச்சமயக் கருத்துக்களின் மெய்ப்பொருள் என்ன என்பதை ஆராய்வதும், மற்றும் அச்சமயத்தின் மந்திர தந்திர வழிபாட்டு முறைகளில் சர்ச்சையும் ஆராய்ச்சியும் செய் வதும் குருவருளுக்கும் திருவருளுக்கும் பாத்திரரான பின் தானுகவே நின்றுவிடும்.

பல சமய நெறிகளையும், நூல்களையும் கற்று அவற்றினைக் கூர்ந்து ஆராய்ந்து பல ஐயப்பாடுகளை அவ்வப்பொழுதுஎழுப்பி வந்த நரேந்திரர் ஸ்ரீ ராமகிருஷ்ணபரமஹம்சரை அணுகி அவரது 'ஸ்பரிச தீட்சையினைப் பெற்றவுடன் என்ன வானுர்? அதே கணத்தில் விவேகாநந்தராக மறிவிட்டார் அல்லவா? இனி எண்ணுதற்குச் சமயங்களும் இல்லை என்ற நிலையில் அசையாத உறுதிப்பாட்டுடன் தொண்டாற்றத் தொடங்கி விட்டார் அல்லவா?

இ. ஈன்றெடுப்பாள் ஒருதாயும் இல்லை

(1) இனி என்னைப் பெற்றெடுக்கும் தாயரும் இல்லை.

(2) அன்னையின் அருளினை அடைந்தபின் பிறவியற்ற நிலை தானுகவே கிட்டிவிடுகிறது. ஆகவே இனி மற்றெரு தாயின் வயிற்றில் பிறக்க வேண்டிய அவசியம் இன்றிப்போய் விடுகிறது. அல்லது அவ்வடியவரை இனிப் புதல்வராகப் பெற்றெடுக்கும் அன்னையார் யாரும் இல்லை.

(3) அல்லல்போம் அருவினைபோம் அன்னை வயிற்றில் [வந்த
"தொல்லைபோம்"

என்ற பாடலும் இதே கருத்தினைக் கூறுகிறது.

(4) மயில் வடிவாகி அன்னை பூசித்த திருமயிலையினை நினைத்துப் புகழ்ந்தவர்களுக்கு அன்னை வயிற்றில் கருவாய்வரும் தொல்லையில்லை எனக் கூறுகிருர் மயிலைத்தலப்புராண ஆசிரியர் நாதமுனி முதலியார் அவர்கள்,

"மயிலையெனவே வழுத்துவோர்கள் மாதர் கருவாரார்"
என்பது அவரது பாடல்.

(5) "தருவெனும் கற்பகத்தாயே! நின் திருத்தாள் [பிடித்தேன்
கருவினிற்சிக்கிக் கலங்கியழியாக் கலைதருவாய்"

என கற்பகாம்பிகை அந்தாதி ஆசிரியர் திரு. சுத்த சத்வானந்தா அவர்கள் வேண்டுகிறார்.

ஈ. அமையும் அமையுறு தோளியர்மேல் வைத்தஆசையுமே

(1) மூங்கிலின் வழ வழப்பினையுடைய தோள்களைப்பெற்ற மகளிர் மேல் கொண்ட ஆசையும் இனி இல்லா தொழியும் என்கிறார்.

(2) மூங்கிலின் இரண்டு கணுக்களுக்கு இடைப்பட்ட பகுதியினைப் போல் பெண்களின் தோள் மிக்க வழவழப்புப் பொருந்தியிருப்பதால் அதனை உவமை கூறி வருணித்தல் கவிஞர்களின் மரபு.

(3) "வேயுறு தோளி பங்கன்" என்ற கோளறு பதிகத்திலும், "முறிமேனி முத்தம் முறுவல் வெறிநாற்றம் வேலுண்கண் வேய்த்தோள் அவர்கட்கு" என்ற திருக்குறளிலும் இவ்வுண்மையினைக் காண்கிறோம்.

(4) 'அமைதல்' என்றால் வேண்டா தொழிதல் எனப் பொருள்படும்.

"இருகண்ணால் அமையாதென்றார்" எனக்கம்பராமாயணத்தில் வருகிறது. இங்கு சீதையின் அழகினைக் காண இரு விழிகள் 'போதாது' என்பது பொருள். அதாவது அமைதல் என்றால் 'போதும்' என்ற பொருள் வருகிறது.

அம்பிகை அடியவர் அமையுறு தோளியர் மேல் வைத்த ஆசையினை வேண்டா தொழிப்பார்.

மற்றும் கற்புநெறி நின்ற காரிகையர் இன்பமும் இனி 'போதும்' எனக் கருதி 'வானப் பிரஸ்த' ஆஸ்ரம நெறி நின்று அம்பிகையினை வழிபடுவர்.

(5) அன்னையின் அடியவர்கள் பெண்குலத்தைச் சக்தி வடிவமாகவே காண்பர்.

'அவளது அடியவரைப் பின் தொடர்ந்து அழகு மிக்க பெண்கள் நூற்றுக் கணக்கில், தங்களது மேலாடை சரியவும், கருங் கூந்தல் கலையவும் ஆசையுடன் ஓடிவருகின்றனர்" என சௌந்தர்யலகரி குறிப்பிடுகிறது.

பெண்ணாசையற்றவர்களைப் பெண்கள் ஏன் இவ்வாறு தொடருகின்றனர்?

இதற்கு உரையாசிரியர் பிரம்மஸ்ரீ தேதியூர் சுப்ரம்மணிய சாஸ்திரிகள் பின்வருமாறு தெளிவுரை வழங்குகிருர்.

இங்குப் பெண்கள் என்றது சிற்றின்பத்தினை நல்கும் பூதவுடலினையுடைய மாதரைக் குறிக்காது. சித்திகளை நல்கும் சித்திதேவதைகளும், உபநிடத மாதர்களுமே இங்குக் குறிப்பிடப்படும் பெண்களாகும். அதாவது அன்னையின் அடியவர்களுக்குச்சித்திகளும் வேதாந்தஞானமும் எளிதுஎன்பதுகருத்து.

அக்கருத்தினை யொட்டி இப்பாடலின் சொற்றொடர்க்குப் பொருள் கொண்டால் அமையுறு தோளியர்களான சித்தி மாதர்கள், உபநிடத தேவதைகள் ஆகியோர்மீது அடியவர் வைத்த ஆசை நிறைவேறும் அல்லது நன்ருக்வே 'அமையும்.' அதாவது சித்திகளும் வேதாந்த ஞானமும் கிட்டும்என்பதாகும்.

(6) அமைதல் என்ருல் வேண்டா தொழிதல் அல்லது 'போதும்' என்பது பொருள் ஆகவே அம்பிகை அடியவர்கள் மருட்சித்தி தேவதைகள் மீதும் வரட்டு வேதாந்தத்தின் மீதும் வைத்த ஆசைகளை வேண்டா தொழிப்பர் எனவும் பொருள் கொள்ளலாம். தம்பதிகள் இணைபிரியாது அன்போடு இயைந்திருத்தல் இப்பாடலின் பாராயண பலன் ஆகும்.

சிவத்திரு. சோமசுந்தர நாயகரும், — சபாபதி நாவலரும்

'சித்தாந்தப் புலவர்மணி'

திரு. ந. ரா. முருகவேள், M. A., M. O. L.

முன்னுரை :

"சான்றோர்களின் வாழ்க்கை வரலாறுகள், நாமும் அவர்களைப்போல நடந்து, நம்முடைய வாழ்க்கையினையும் தெய்விக நலம் நிறைந்ததாக ஆக்கிக் கொள்ளுதல் இயலும் என்று, நம்மனோர்க்கு நினைவூட்டி அறிவுறுத்துகின்றன. காலம் என்னும் மணலில், அவர்கள் பதித்துவிட்டுச் செல்லும் அடிச் சுவடுகள், பிறவி என்னும் கடலில், வாழ்க்கை என்னும் மரக்கலத்தில் ஏறிக் கவிழ்ப்புண்டு தவறித்தடுமாறித்தத்தளித்து நிற்கும் நமக்குத் தளர்ச்சி நீக்கி நலம் புரிகின்றன."

"சீலம் மிக்க பெருமக்கள்
சிறந்த நல்ல எழில்வரலாறு,
ஏல நாமும் அவர்களைப்போல்
இறைமை வாழ்வெய் துதல்தேற்றும்;
கால மணலில் பதித்தவர்காற்
சுவடு, வாழ்வாம் நலம்கவிழ்ப்பச்
சாலத் தவிக்கும் சகோதரரைத்
தைரியமேகொண் டுயச்செய்யும்" *

— தமிழாக்கம், ந. ரா. முருகவேள்

---

* "Lives of great men all remind us
we can make our lives sublime,
And, departing, leave behind us,
Footprints on the sands of time;
Footprints, that perhaps another,
Sailing over life's solemn main,
A forlorn and shipwreck'd brother,
Seeing, shall take heart again"

— H. W. Longfellow.

சோமசுந்தர நாயகர் :

சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியில் சைவமும் தமிழும் தழைக்கத் தொண்டாற்றிய சான்றோர்கள் பலருள், சோம சுந்தர நாயகர், சபாபதி நாவலர் என்றும் இருபெருஞ் சான்றோர்களும் குறிப்பிடத்தக்க பெருஞ்சிறப்பு உடையவர்கள் ஆவர். அவ்விருபெருமக்களையும் அண்மைக்காலத்தில் நமது "பொருட்சமயமுதற் சைவ நெறி தான் பெற்ற புண்ணியக்கண் இரண்டு" எனக்கூறி, நாம் பெரிதும் மகிழலாம். "முதிர்கடல் ஞாலம் முழுவதும் விளக்கும் கதிர் ஒருங்கிருந்த காட்சிபோல", இவ்விருவரும் ஒருகாலத்தினராய் உற்றினிது வாழ்ந்து, சிவ நெறிக்கும் செந்தமிழ்க்கும் செய்துதவிய தொண்டுகள் பற்பல வாகும். சோமசுந்தர நாயகர் அவர்கள், சென்னை நகரிற் சூளை என்னும் பகுதியின்கண் வாழ்ந்து வந்தவராவர் (1846 - 1901). சேதுபதி மன்னர் அவர்களால் "சைவசித்தாந்த சண்டமாருதம்" என்னும் சிறப்புப் பட்டம், இவர்க்கு நல்கப்பெற்றது. சித்தாந்த சேகரம், சித்தாந்த பூஷணம், சிவாதிக்ய ரத்நாவளி, சிவ பாரம்யப் பிரதரிசினி, சைவசூளாமணி, ஆசார்யப் பிரபாவம், ஆபாச ஞான நிரோதம், மெய்கண்ட சிவதுஷண நிக்ரகம், இராமாநுச மத சபேடிகை, கூரேச விஜயபங்கம், கீதார்த்தப் பிரகாசிகை முதலிய பலப்பல அரும்பெரும் நூல்கள், இவரால் இயற்றப்பெற்றன. அப்பைய தீட்சிதர்போல, இவரும்நூற்றுக்கு மேற்பட்ட அரும்பெரும் நூல்கள் இயற்றியவர் (சதுர் அதிக சதகிரந்தகர்த்தா"). சைவசமயத்தின் தனிப்பெருமாட்சிமையினை அறைகூவி வாதிட்டு நிலைநாட்டி நிறுவுவதற்குப் போராடிய மாபெரும் சைவசித்தாந்த வீரர் (Heroic Champion)! தமிழ் தெலுங்கு வடமொழி கன்னடம் ஆங்கிலம் என்னும் பல மொழிகளை நன்கினிது கற்றுத்தேர்ந்தவர் சோமசுந்தர நாயகர்.

நாயகரின் மாணவர் :

தனித்தமிழ் இயக்கத்தந்தையும், சைவசித்தாந்தப் பெருஞ் சான்றோரும், முனைத்தநற் கொள்கை வீரரும், மும்மொழிப் புலமை வேந்தரும் ஆக விளங்கிய பேராசிரியர் மறைமலை அடிகளார், சோமசுந்தர நாயகரின் அரும்பெறல் மாணவர்கள் பற்பலருள் தலைசிறந்த ஒருவர்எனின்,

" மகனே தோழி என்றனள்,
அதன் அளவு உண்டுகோள் மதிவல் லோர்க்கே"

என்றுற்போல, இவர்தம் சீரும் சிறப்பும் இனையஎன எண்ணி உணரலாம். சிவபெருமானின் அளப்பருஞ் சிறப்பினை விளக்க முற்படும் மாணிக்கவாசகப் பெருமான், "முழுவதும் கண்ட

வனைப் படைத்தான் முடிசாய்த்து, முன்னாட்செழுமலர் கொண்டு எங்கும்தேட அப்பாலான், இப்பால் எம்பிரான்' என்று கூறுவதுபோன்ற குறிப்பினது இஃது! ஆசிரியர் மறை மலை அடிகள், தாம்இயற்றிய "திருவொற்றி முருகர் மும்மணிக் கோவை" என்னும் நூலின்கண்,

"ஒருவா யாணர் மருவு சென்னைத்
தவம்பெறத் தோன்றி, நவையது தமிழும்
வடநூற் பரப்பும் நிலைகண்டு உணர்ந்தாங்கு,
உள்ளுறை கருவாய்த் தெள்ளொளி விரிக்கும்
சைவ சித்தாந்த முடிப்பொருள் எடுத்தாங்கு,
அறங்கரை நாவில் திறம்பட விளக்கிப்,
புறப்படு சமயப் பொய்ப்பொருள் நூறி,
நலங்கிளர் தன்மையும் புலங்கொளாஃ காட்சியும்
இயைந்தொருங்கு ஈண்டிய, அமையாப் பெருமைச்
சோமசுந்தரத் தோம்அறு குரவன்"

என்று, ஏற்றுரை (உபசாரம்) முறையான் அன்றி, உண்மை யுணர்வுப் போற்றுரை முறைமையில் துதித்து வழுத்தியுள்ளனர் எனின், நாயகர் அவர்களின் நற்பெரு மாட்சிமைகள் இனையன என்பது, அனைவருக்கும் இனிது விளங்கும். இம்மட்டோ! ஆசிரியர் மறைமலை அடிகளார் "சோமசுந்தரக் காஞ்சி" "சோமசுந்தரக் காஞ்சி யாக்கம்" என்னும் இருபெரு நூல்களை இயற்றிஇருப்பதோடு, "சைவசித்தாந்த ஞானபோதம்" என்னும் பிறிதொரு நூலையும், தம் ஆசிரியராகிய நாயகர்தம் நினைவுக் குறியாக வகுத்துப் பொறித்துள்ளார்.

சபாபதி நாவலர் :

சபாபதி நாவலர் அவர்கள் (1845 – 1903), யாழ்ப்பாணத்து வடகோவையில் தோன்றியருளியவர். தமிழ் வடமொழி ஆங்கிலம் என்னும்மொழிகளில் புலமைநிரம்பியவர். திருவாவடு துறை ஆதீனத்துச் சீலத்திரு சுப்பிரமணிய தேசிக சுவாமிகள் அவர்களால் "நாவலர்" என்னும் சிறப்புப் பட்டம், இவருக்கு வழங்கப்பட்டது. சிதம்பர சபாநாதபுராணம், சிவகர்ணாமிர்தம், பாரத இராமாயண சதுர்வேத தாற்பரிய சங்கிரகங்கள், திருச்சிற்றம்பல யமக அந்தாதி, திருவிடைமருதூர்ப் பதிற்றுப் பத்து அந்தாதி, திராவிடப்பிரகாசிகை முதலிய பல நூல்களை இவர் இயற்றியுள்ளார். 'ஞானாமிர்தம்' என்னும செந்தமிழ் இதழ் ஒன்றும் இவரால் சிலகாலம் நடத்தப்பெற்றது. 'திருமந்திரம்' பதிப்பித்த மாவை-விசுவநாதபிள்ளை அவர்களும், 'மொழிநூல்' இயற்றிய மாகறல்-கார்த்திகேய முதலியார் அவர்களும், இவர் தம் மாணாக்கர்கள் பலருள்ளே குறிப்பிடத்தக்க சிறப்புடைய

வர்கள் ஆவர். "சீர்பரவும் புவித் தருக்கும் புலவர்களுக்கெல்லாம் ஒரு சிங்கம்போல்வான் "......"வாய்ந்த பெருந்தவம் மருவுசிவஞானமுனிவரன்போல் உரைஎழுதும் வலிமையாளன்" ...... "ஆகமநூல் ஆய்ந்து மகிழ் விநோதன் "........." நாவலர் ஏது" என்றெல்லாம் பலராலும் பாராட்டப்பெற்ற பல்கலைக் குரிசில், சபாபதி நாவலர்!

கருத்து வேற்றுமைகள் :

நாவலர் அவர்களும், நாயகர் அவர்களும் சைவமும் தமிழும் தழைக்கத் தொண்டாற்றுதற்கண், ஒத்தகருத்தும் உணர்ச்சியும் மிக்குடையவர்களாய் விளங்கினர் ஆயினும், சிற்சில செய்திகளில் சிறு சிறு கருத்துவேறுபாடு கொண்டவராய் விளங்கினர். அவற்றின் பொருட்டு ஒருவரையொருவர் மறுத்து, நூல்கள் எழுதி இகலி நின்றனர். அவ்விகல் மிகுதியால் அவர்கள் ஒரோவழித் தம்முள் ஒருவரை யொருவர் தமது புலமைநலப் பெருமித மிடுக்கால் இழித்துரைத்துப் பழித்துக் கொண்டும், காதி மோதி வாதாடிப் போந்தனர் எனத் தெரிகின்றது. அவ்விழிப்புரைப் பழிப்புரைகள் தாமும், ஒருவகையில் அறிவும் அழகும் அருமையும் இலக்கியச் சிறப்பும் உடையனவாய்த் திகழ்கின்றன எனலாம். அவர்தம் அறிவு ஆராய்ச்சிமிக்க, திட்ப நுட்ப வேறுபாடுகள் ஒருசிலவற்றினை மட்டுமாதல், நாம் ஓரளவேனும் தெரிந்து உணர்ந்து கொள்ளுதல், நம்மனோர்க்குச் சுவையும் நலமும் பயப்பதாகும்.

1. "முனிமொழி" :

"தேவர் குறளும் திருநான் மறைமுடிவும் மூவர் தமிழும்" என்றுவரும் ஔவையார் பாடலில் 'முனி' என்று சுட்டப் பெற்றவர் மாணிக்கவாசகர் என்பது சபாபதி நாவலர் கருத்து. ஆயின், ஆண்டு 'முனி' என்றது வேதவியாதர் என்பதும், 'மொழி' என்றது வேதாந்த சூத்திரம் என்பதும் நாயகர் கருத்து வியாதநூல் ஏகான்ம வாதம் நுவலுவது என்று சித்தாந்தப் பிரகாசிகையிலும், சிவஞான மாபாடியத்தும், சர்வான்மசம்பு சிவாசாரியாரும், ஆசிரியர் சிவஞான யோகிகளும் கூறுதலின், அதனைத் தேவர் குறள் முதலியவற்றுடன் ஒருங்கெண்ணுதல் பொருந்தாது என்பது, சபாபதி நாவலர் அவர்கள் கருத்து. ஆனால் "முனிமொழிப் பிரநாசிகை" என்னும் நூலின்கண் நாயகர் அவர்கள், சிவஞான யோகிகளும், சர்வான்ம சம்பு சிவாசாரியரும் "மாயாவாத நூல் செய்தான் வியாதன்"

என்பதேயன்றி வேதாந்த சூத்திரம் மாயாவாதம் போதிப்பதென்று, யாண்டும் ஓதிற்றிலர் என்பர். நீலகண்டர்-பண்டிதாராத்தியர் – இராமாநுசர் – ஆனந்த தீர்த்தர் போன்ற பலர், வேதாந்த சூத்திரத்திற்கு உரை வகுத்திருத்தலின், சங்கரர் உரை கண்டமை ஒன்றேகொண்டு, அதனே மாயாவாதநூல் என்றல் அமையாது எனவும்; அது சைவசித்தாந்தச் சார்பான நூலே என்பது தீபா (Thibaut) என்னும் மேலேநாட்டறிஞரின் பதிப்புரையால் தெள்ளிதிற் புலனும்எனவும், கட்டுரைப்பர் நாயகர்.

2. அபர சுப்பிரமணியர் :

ஆளுடைய பிள்ளையார், உருத்திரசன்மனார் உக்கிர பாண்டியனார் போல்வாரோர் 'அபர சுப்பிரமணியர்' என்பதும், அவர் தாய் வயிற்றின்கண் கருவுற்று உருத்தெரிய வந்து தோன்றியவரே என்பதும், சபாபதி நாவலர் கொள்கை. ஆளுடைய பிள்ளையார் மாதா உதரத்தில் தங்கியிருந்தார் என்ருவது, யோனி வாய்ப்பட்டுப்பிறந்தார் என்ருவது, அல்லது அவர் குமாரக் கடவுள் அல்லர் என்ருவது நற்றறிந்த மேலோர் கருதவும் செய்யார் என்பது, நாயகர் அவர்களின் வழக்கீடு.

"காழிநகர் வந்தருளும் கண்மணியைப்
பசுவாகக் கருது வாரைப்
பாழியுளச் சமண்குண்டப் பதிதர்எனக்
கூறுதலே பான்மையாமால்"

"மண்முகத்தில் எழிற்சிற்றம் பலநாடி,
அருணகிரி வள்ளல் ஆதி
பண்முகத்த மொழிப்புலவர், சம்பந்தப்
பெருமானேப் பாடி, எங்கள்
சண்முகத்துப் பெருந்தகையே என்று, துதி
கூறியருள் சார்ந்தார்; இன்று
கண்முகத்தில் லாக்குருடர் போன்று, சிலர்
வாதாடிக் கலங்கி னாரே"

"பொருட்பயன் கணர் புன்மையே பேணிப்
புலம்புவார் உரைப்பினும் கேளார்
பொய்கொளும் அபர சுப்பிர மணியர்ப்
புதுமையே பேசிநாள் இழப்பார்."

3. ஆளுடையார் :

ஆளுடைய பிள்ளையார் என்பது, ஆளப்படுதலுடைய பிள்ளையார் என்று பொருள் விரிக்கப்படும். பரமசிவனே கந்தசுவாமியாக விளங்குதலின், அக்குமாரசுவாமியோடு சம்பந்தப் பிள்ளையார்க்கு வேறுபாடு தெரிப்பார், ஆளுடைய பிள்ளையார்

என்று, அங்ஙனம் பிறிதின் இயைபு நீக்கும் விசேடனம் அடுத்து ஓதியருளினர் என்பது சபாபதி நாவலர் விளக்கம். ஆனால் நாயகர் அவர்களோ, சமய குரவர்களின் பரத்துவ நிலையைச் சிறப்பித்துக் குறிப்பிடுதற் பொருட்டே, ஆளுடையபிள்ளையார்– ஆளுடைய அரசுகள் – ஆளுடைய நம்பிகள் – ஆளுடைய அடிகள் என்னும் திருப்பெயர்கள் வழங்கா நிற்கவும், அவற்றின் அருமையையும் பெருமையையும் தெளிந்திடாதார் சிலர். ஆளுடையார் என்பதற்குச் 'சிவனால் ஆட்கொள்ளப்பெற்றவர்' என்று பொருள்கூறி மயங்குவர்; அறுபத்துமூவரும் சிவபிரானால் ஆட்கொள்ளப் பெற்றவரேயாக, இந்நால்வருக்கு மட்டும் அவ்விசேடம் வந்து பொருந்துமாறு என்னை? ஆட்கொள்ளப் பெற்றவரையெல்லாம் 'ஆளுடையார்' எனச் சேக்கிழார் கூறுமையால், 'உலகத்தை ஆளும் தன்மையுடையார்' என்பதே செம்பொருளாகும் என வலியுறுத்தி, "இலக்கணம் அறியார், இலக்கியத் தேர்ச்சி எய்திலார், எட்டுணையேனும்; எண்ணுவர் தாமே முந்துணர்ந்தவராய், ஏழைநாவலர்கள்தாம் என்னே!" என்று இகழ்ந்துரைத்து இரங்குவர், நாயகர் அவர்கள்!

4. சிவஞான சுவாமிகள் :

சபாபதி நாவலர்கள் அவர்கள், சிவஞான சுவாமிகள்பாற் பெரிதும் ஈடுபாடு உடையவர். நாயகர் அவர்கள், திருஞான சம்பந்தர்பாற் பெரும்பத்திமை வாய்ந்தனர். ஓர் இடத்தில் சபாபதி நாவலர், அவர்கள், திருஞானசம்பந்தரோடு சிவஞான சுவாமிகளை ஒப்பிட்டுச் சிறப்பித்துப் பெரிதும் புகழ்ந்து போற்றி எழுதினர். நாயகர் அவர்களும், சிவஞான சுவாமிகள்பால் அளவிலாப் பத்தியும் அன்பும் ஈடுபாடும் கொண்டவரே எனினும், "கருங்கொள்ளும் செங்கொள்ளும் தூணிப்பதக்கு என்று ஒருங்கு ஒப்பக்கொண்டானும் ஊரன்" என்றாற்போல, சபாபதி நாவலர் திருஞானசம்பந்தப் பெருமானுடன் சிவஞான சுவாமிகளையும் ஒருங்கு சேர்த்து ஒப்பவைத்துப் புகழ்ந்து போற்றியதனை உடன்படாமல், அதுகுறித்து நாயகர் பின்வருமாறு இரங்கிக் கடிந்துரைத்துப் பாடியுள்ளார்.

"அவஞானம் தெறக்காழி வரும்அமல
வாழ்வினைஎம் அரசை, அன்று
சிவஞானம் குழைத்தம்மை தரஞானப்
பாலுண்ட தெய்வ வாழ்வைத்,
தவஞானப் படிவத்தெம் தனிமுதலைத்,
துறைசைவளர் தம்பி ரானும்
சிவஞான முனிவரோடு சேர்த்துரைப்பார்;
அவர்பாவம் செப்பொணாதே"

5. நாயனர் — சுவாமிகள் :

இனி, நாயனர் – சுவாமிகள் என வழங்கும் சொற்கள் பற்றியும், இவ்விருவர்க்கும் இடையே, கருத்து வேற்றுமை இருந்தது எனத் தெரிகின்றன. "மூவர் முதலிகளை நாயனர் என்று வழங்குவதுவேண்டும்என்பது, ஈழ நாட்டவர் இப்போது எடுத்துக்கொண்ட புதுவழக்கு. சேக்கிழார் பெருமான், சிவ பெருமானை நாயனர் எனப் பல இடங்களிற் கூறியிருப்பது, செய்யுள் வழக்கில்மட்டுமே சிறந்திடும். அடிமைத்திறம்செய்து உயர்ந்தவர்களுக்கும், அடிமைத் திறத்தை இனிது காட்டி உலகத்தை உய்வித்தவர்களுக்கும், பேதம் தோன்றவே அறு பத்துமூவரைச் செய்யுள் வழக்கோடு, ஏனைவழக்கினும் நாயனர் என்று வழங்குதலும் ஆசாரியர்களைச் செய்யுள் வழக்கின் மாத்திரமே நாயனர் என்று வழங்குதலும் மேலோர்கட்கு ஒப்பா யிற்று. இவ்வுண்மையைத் தெளிந்தோர் ஆசாரியர் நால்வர் களையும், சுவாமிகள் என்றே வழங்குவர்" என்பது நாயகர் அவர்களின் கூற்று.

6. ஞானம் எத்தனை ?

நாயகர் அவர்களுக்கும், நாவலர் அவர்களுக்கும் பெரிதும் கருத்துவேற்றுமையை விளைவித்தது, "சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்" எனவரும் பெரியபுராணப் பாடலே யாகும்.

"சிவனடியே எனும்பனுவற் பொருள்சிதைய
இருஞானம் செப்பி,எங்கள்
தவமுதல்வர் சம்பந்தர் தமைச்சாமுசித்தர்
எனச் சாற்றி,நீடு
பவம்பெருக்கி, ஞாயமொரு சிறிதுமுண
ரார்;நிந்தை படிப்பார்;தீமை
உவந்தெரிவாய் நிரயமுமி ழாதவரை;
எஞ்ஞான்றும் உண்மைதானே"

எனவரும் நாயகர் பாடல் இதனை உணர்த்துவதாகும். ஞானம் இருவகைத்து என்பது நாவலர் கருத்து. நான்கு வகைப்படும் என்பது நாயகர் கருத்து. "உயர்ஞானம் இரண்டாம்; மாரு மலம் அகல அகலாத மன்று போதத் திருவருள் ஒன்று; ஒன்று அதனைத் தெளிய ஓதும் சிவாகமம் என்று உலகறியச் செப்பும் நூலே" என்பது முன்னைய கொள்கைக்கும்; "கேட்டலுடன்

சிந்தித்தல் தெளிதல் நிட்டை கிளத்தல் என ஈரிரண்டாம் கிளக்கின் ஞானம்" என்பது பின்னைய கொள்கைக்கும் சான்றாகும்! இவ்விரு திறக்கொள்கைக்கும் பொருள் முடிவின் கண் வேறுபாடு பெரிதும் இன்றாயினும், தத்தம் கருத்தை வலியுறுத்துதற்கு, நாவலர் அவர்களால் ஞானசூடாமணி என்னும் நூலும், நாயகர் அவர்களால் ஞானபேத விளக்கம், ஞானபேதத் தெளிவு, ஞானபேதத் துணிவு, ஞானபேத விளக்க நியாய ரக்ஷாமணி எனப் பல நூல்களும் இயற்றப்பெற்றன என்று அறிகின்றோம். இன்னோரன்ன சுவைமிகு செய்திகள் பல.

முடிவுரை :

சபாபதி நாவலரும், சோமசுந்தர நாயகரும் மிகச் சிறந்த பேரறிஞர்கள் ஆவர். பலகலைகளிலும் மொழிகளிலும் தேர்ச்சிப் பெற்று, நுண்மாண் நுழைபுலம் சான்ற பெருமக்கள் அவர்கள். இத்தகைய பெருமக்களின் வரலாற்றுச் செய்தி குறிப்புக் களையும், நுண்மாண்நுழைபுலம் மிக்க அறிவாராய்ச்சி விளக்கத் திறங்களையும் தெரிந்து வைத்துக்கொள்ளுதல், நம்மவோர்க்குப் பெருநலங்கள் பல பயப்பனவாகும். சைவசமயப் புலமைநலம் பெறவிரும்பும் ஆராய்ச்சி அறிஞர்களுக்கு, இன்னோரனைய வற்றைத் தெரிந்து வைத்துக் கொள்ளுதல், மிகமிக இன்றிய மையாத தொன்றாகும். அளவைநெறி பிறழாமல் அவர்கள் இயற்றி யளித்துள்ள வழக்கீட்டு மறுப்புரை நூல்கள், அறிவிற்குப் பெருவிருந்தாக மிளிர்தலோடு, சென்ற நூற்றாண்டில், தமிழ் உரைநடை வளர்ச்சித் திறங்களையும், தமிழகச் சூழ்நிலைகளையும் எல்லாம் உணர்ந்து கொள்ளுதற்கு உரிய உறுபெருங் கருவிகளாகவும், பேருதவி செய்யும்! எளிய பொது மக்களுக்கு அவை ஒருகால் வேண்டப்படுவன அல்ல வாயினும் அறிவாராய்ச்சித் துறைகளில் ஈடுபட்டு, இன்பம் துய்த்து "நூலாருள் நூல் வல்லார்" எனத் திகழ விரும்பும் தக்கார் அனைவருக்கும், அவைகள் பெரிதும் வேண்டியனவாம் என்பது ஒருதலை. ஆனால், அந்தோ! அந்நூல்களெல்லாம் இந்நாளிற் "பேரும் அறிந்திலேன் என்செய்குவேன் இந்தப் பேதையனே" என வருந்திப் புலம்பும் நிலையில், மறைந்து வருகின்றன. அவற்றைப் போற்றிப் பாதுகாக்க வேண்டுவது, நம்மனோர் அனைவர்க்கும் கடமை ஆகும்.

சொல்லார் புகழ்ச்சோம சுந்தர நாயகரும்,
நல்லார் சபாபதி நாவலரும் — வல்லாராய்த்
தம்முள் மறுத்தியற்றும் தமிழ்ச்சைவ நூல்களெலாம்
மெய்ம்மைஉணர் விற்காம் விருந்து!

செய்ந்நன்றியறிதல்

வித்துவான். திரு. தா. குருசாமி தேசிகர்

[தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் 12—9—'82 ஞாயிற்றுக்கிழமையன்று அருளாசி வழங்கிய காலை எங்கள் சிந்தனைக்கு விருந்தாக அமைந்த குறளும் குறள் விளக்கமும்]

திருச்சிராப்பள்ளித் தேவாரத்தில் பெருமானை, திருஞான சம்பந்தர் 'நன்றுடையானைத் தீயதிலானை' என்று அருளிச் செய்கின்றார். நன்மையுடையவன் என்றும், தீமை என்பது இல்லாதவன் என்றும் இதற்குப் பொருளாகும். 'நன்று' என்ற சொல்லே நன்றி எனலாயிற்று. நன்றி என்பதற்குப் பொருள் கூறவந்த பரிமேலழகரும் 'நன்மை' ‡ என்றே பொருள் கூறுகின்றார்.

'நன்றி' என்பது உலகியலில் வார்த்தையளவில் நிலாவி வருகின்றது. மேனாட்டு முறையில் 'நன்றி' என்று கூறுபவரும் உள்ளம் உணர்ந்து பாராட்டுகின்றனர் என்று கூறமுடியாது. மறவாமையே நன்றி உணர்தலின் சின்னமாகும்,

திருவள்ளுவர் 'செய்ந்நன்றியறிதல்' என்று பேசுகின்ற பகுதி, உலகியலார் தனக்குப் பிறர் செய்த நன்மையை மறவாமை என்றே எண்ணுகின்றனர். அது மட்டும் அவ்வதிகாரத்தின் பொருளன்று.

தோற்றுவாயாகக் காட்சி தருகின்ற குறளில், தனக்கு முன்னொருதவி செய்யாதிருக்க, ஒருவன் பிறனுக்குச் செய்த உதவிக்கு, மண்ணுலகும் விண்ணுலகும் கைம்மாறாகக் கொடுத்தாலும், ஒத்தலரிது — என்ற பொருளில் அறிவு துலக்கக் கூறியுள்ளார்

---

‡ தந்தைமகற்காற்றும் நன்றி – 'தந்தை மகனுக்குச்செய்யும் நன்மையாவது' என்று 'மக்கட்பேறு' அதிகாரத்தில் பொருள் உரைக்கப்படுகிறது பரிமேலழகரால்,

கைம்மாறுகளெல்லாம் காரணம் உடையது. காரணம் இல்லாத உதவிக்கு அவை ஆற்ருவாகும். இதனை அப்பரடிகள்,

“இருளாய உள்ளத்தின் இருளை நீக்கி
இடர்பாவங் கெடுத்து ஏழையேனை உய்யத்
தெருளாத சிந்தைதனைத் தெருட்டித்
தன்போல் சிவலோக நெறியறியச் சிந்தைதந்த அருளானை”

என்றும்,

“என்பிருத்தி நரம்புதோல் புகப்பெய்திட்டு
என்னையுமோர் உருவமாக்கி
இன்பிருத்தி வினைகடிந்திட்டு என்னுள்ளம்
கோயிலாக்கி
அன்பிருத்தி அடியேனைக் கூழாட்கொண்டு
அருள்செய்த ஆரூரர்தம்
முன்பிருக்கும் விதியின்றி முயல்விட்டுக்
காக்கைப்பின் போனவாறே”

என்றும் அருளிச்செய்த வாக்குகள், இறைவன் செய்யாமல் செய்த உதவியை விளக்குகின்றன. இதனை மணிவாசகப் பெருமான்

“அன்பினுல் அடியேன் ஆவியோடக்கை
ஆனந்தமாய்க் கசிந்துருக
என்பரம் அல்லாது இன்னருள்தந்தாய்
யான் இதற்கு இலன் ஓர் கைம்மாறு”

என்று பிரதியுபகாரம் செய்ய முடியாத தன்மையை விளக்கி நிற்கின்றது.

தனு கரண புவன யோகங்களைத் தந்து, நம்மை வாழ் வாங்கு வாழ வைப்பதில் கருணைபூண்ட இறைவனின் திருவருளை மறந்து வாழ்வது நன்றி மறந்த செயலாகும். இந்த இறைவனின் உபகாரத்தை மறந்து வாழ்பவர்க்கு, நன்றி உணர்வின்றி விளங்குபவர்க்கு, உய்வே இல்லை.

நன்றியை மறத்தலே உயிர்களின் இயல்பு. உலகியலில் ஒருவர் எல்லா உதவியும் செய்து வாழவைத்திருந்தும்கூட, வெறுப்பின் காரணமாக, இவர் எனக்கு என்ன உதவிசெய்து விட்டார் என்று வினவுதலைக் கண்டிருக்கின்ருேம். இது உயிர் களின் சுபாவம். ஆதலால் தான் திருவள்ளுவர் இறுதிக்குறளில்

செய்ந்நன்றி கொன்ற மகனுக்கு உய்வே இல்லை என்றும், மற்று எந்த நன்றியையும் சிதைத்தவர்க்குப்பாவத்தில் நீங்கும் வாயில் உண்டு என்றும் அருளிச் செய்தார்.

" எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு "

என்றகுறள் இறைஉபகாரத்தை எண்ணி மறவாதுபோற்றுதலே உயிர்களின் இறுதிமுடிவு என்கிறது. இதையே கற்றதனால் ஆய பயன் என்றார் பிறதோரிடத்தில்.

புறநானூற்றில் ஆலத்தூர்க்கிழார்என்பவர் திருவள்ளுவரின் ஞான இலச்சினையுடைய, மேற்கண்ட குறளைத் தம்பாட்டிற்கு ஏற்ப மாற்றிப்பாடித் திருக்குறளை 'அறம்' எனப்பாராட்டிப் பேசுகின்றார்.

" ஆன்முலை அறுத்த அறனிலோர்க்கும்
... ...
குரவர்த் தப்பிய கொடுமை யோர்க்கும்
வழுவாய் மருங்கில் கழுவாயும் உளவே!
நிலம்புடை பெயர்வதாயினும் ஒருவன்
செய்தி கொன்றோர்க்கு உய்தி இல்லென
அறம்பாடிற்றே ஆயிழை கணவ "

இவ்வரிகளில் செய்ந்நன்றி கோறலை உய்வில்லதோர், குற்றமெனத் திருவள்ளுவர் கூறியதையே விளக்குகின்றார்.

செய்ந்நன்றி கொன்ற குற்றத்தை வேறு அறநூல் ஆசிரியர் எவரும் இங்ஙனம் கண்டித்துக் கூறவில்லை. சேக்கிழார்பெருமான் இதனை உள்ளடக்கியே,

" நன்றியில் நெறியில் அழுந்திய நாடும்
நற்றமிழ் வேந்தனும் உய்ந்து
வென்றி கொள் திருநீற்று ஒளியினில்
விளங்கும் மேன்மையும் படைத்தனம் என்பார் "

என்ற திருவாக்கில் நன்மை இல்லாத நெறியில் நடைபோட்ட நாடு என்று சுட்டிக்காட்டினார். தெய்வம்தெற்றெனத்தெளியாதும் மனம்பற்றும் வாழும்சமணர்கள், முதல்வனை உணராதவர்கள்; அவன்வழங்கிய உபகாரத்தையும் உன்னாமல் உழன்றுவாணாள் வீணாக்கி — மூலமுதற்கருவை அறியாது மறந்து உழலும்

தன்மையர். அவரும் அவர்நெறியுமே 'நன்றியில் நெறி' என்றார் சேக்கிழார்.

செய்ந்நன்றி கொன்றவர்கள் புத்தர் சமணர் முதலியோர். சைவம் ஒன்றே செய்ந்நன்றி உணர்வுடையது. செய்ந்தன்றி மறவாத சீர்மையுடையது ஒருவன் செய்த நன்றியைச் சிதைத்த புத்தசமணம் தமிழ்நாட்டில் கால் கொள்ளாதாயிற்று. ஆதலால் செய்ந்நன்றியறிதலும், செய்ந்நன்றி கொல்லுதலும் முறையே பிறர் செய்த நன்மையை மறவாமை என்பதும், ஒருவன் செய்த நன்றியைச் சிதைத்தல் என்பதும் பொருளாகக் கூறப்படுபவை. இறைவனை மறவாமை என்பதும், அவன் அருளாடலை உணராது மறுப்பது என்பதும் வெளிப்படையாகும்.

இறையருட்சிந்தனை யுடையாரே செய்ந்நன்றி யறிந்தவர், எனக்கூறி ஒருவாறு முடிப்போம்.

வினைதீர்க்கும் வேலன்

உவமானம் இல்லாத குணவானடி—அவன்
உயர்வான சுகவாழ்வு தருவானடி (முருகன்)
குருவாகி அருள்ஞானம் பொழிவானடி—மனக்
  காயிலின் இருள் நீக்கி ஒளிர்வானடி
திருவோங்கும் திருச்செந்தில் பதியோனடி—அவன்
திருநாமம் சொலும் நாவில் இனிப்பானடி
வெறும் நாளை திருநாளாய்ச் செய்வானடி
வேலேந்தி வினைதீர்க்க வருவானடி. (முருகன்)

— அபிராமிதாசன்.

உ

எதிர்காலம்

★

ஜோதிஷம் திரு. A. இராசமாணிக்கம்

ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

(துந்துபிஸு கார்த்திகைமீ 1உ முதல் 29உ முடிய)

(17—11—1982 முதல் 15—12—1982 முடிய)

		ல/	ரா
	இராசி		
கே செ	சூ பு சு சந்	கு சனி	

			கு
ராகு	அம்சம்		சு சூ
			ல/ பு கே
		சந் சனி செ	

ஸ்ரீ துந்துபிஸு ஐப்பசிமீ 30உ மங்களவாரம் அனுஷ நக்ஷத்திரப் பவகரணம் கூடிய காலத்தில் சூரிய உதயம் முதல் 31 நாழிகை 45 விஞடிக்கு ரிஷப லக்கினத்தில் ஸ்ரீ உலகரட்சக ரான சூரியபகவான் உலகசுபிட்சார்த்தத்தை முன்னிட்டு துலா ராசியிலிருந்து விருச்சிகராசி சங்கிரமணமாக கார்த்திகை மாதப் பிரவேசம் செய்தருளுகின்றூர். அன்று விஷ்ணுபதி புண்ணிய காலமாகும். மறுதினம் புதவாரம் கார்த்திகைமீ முதல்தேதி யாகிறது. சங்கிரமண கால கிரகஸ்திதியின் பலஞவது உலகம் எங்கும் நல்ல மழைபெய்து உணவுபயிர்கள் செழித்து பலன் அதிகம் உண்டாகும். தேசங்களில் எங்கும் ஆன்ரோர்களால் சிவபுண்ணிய கைங்கர்யங்கள் தர்மங்கள் ஆகிய நற்பணிகள் நடைபெற்றுவரும். உலகபிரஜைகள் உணவு, உடை, வாழிடம் வாழ்க்கை, அத்தியாவசியப் பொருள்கள் அனைத்தும் பூரண உழைப்பின் மூலம் கிடைக்கப்பெற்று உய்வார்கள். தேசங்

களில் ஆளுநர்கள் தெய்வ நீதியாக செங்கோல் ஆட்சிபுரிந்து மக்களை இரட்சிப்பார்கள்.

உலகிலுள்ள திருமடங்கள் ஆசாரிய பீடங்களில் சிவராஜ யோகத்தில் திருவீற்று விளங்குகின்ற சிவஞான குருமகான்கள் குருமகாசந்நிதானங்கள் உலகத்திற்கு இறைவனை உணர்வதற்கான நன்மார்க்கமாக உள்ள சிவாசார நன்னெறி, இறைவனின் திருவிளையாடல்கள், மனுநீதிதர்ம ஆட்சிமுறை இவற்றை திருவாய்மலர்ந்து சொற்பொழிந்து அருள்வார்கள். சிஷ்ய கோடிகளுக்கு ஞான உபதேசம் செய்து ஆசி அருள்வார்கள். தேசங்களில் எங்கும் தேவாலயங்களில் நித்தியம் ஆறுகால பூஜைகள் உலகசுபிட்சார்த்தம் வேண்டிய பூசனைகள் இலட்ச கோடி அருச்சனைகள் நடைபெறும். பக்தகோடிகள் சிவநேய செல்வர்கள் வைணவர்கள் ஈஸ்வரனருள் பெற்று சீறிய வாழ்க்கை நடத்திஉய்வார்கள்.

குருபெயர்ச்சி

குறிப்பு:– ஸ்ரீ துந்துபிஷு கார்த்திகைமீ 2உ (18—11—82) குருவாரம் மூல நக்ஷத்திரம் கூடிய தினத்தில் சூரிய உதயம் 36 நாழிகை 7 விஞடிக்கு மிதுன லக்னத்தில் ஸ்ரீ குருபகவான் வான மண்டலத்தில் 210 பாகையைக் கடந்து விசாக நக்ஷத்திரம் 3 ஆம் பாதத்திலிருந்து 4 ஆம் பாதத்தில் விருச்சிக ராசியில் மாறுதலாகி அவ்விராசியில் ஒரு ஆண்டுகாலம் சஞ்சரிப்பார். அதனுல் உலகத்தில் மாந்தர்களுக்கு கீழ்கண்டவாறு இராசி களில் குறிப்பிட்டிருக்கிற பலன் நடப்பதாகும்.

1. ரிஷபம், கடகம், துலாம், மீனம் இவ்விராசியையுடையோருக்கு விவாகபிராப்தி, புத்திரபிராப்தி, குடும்ப சுபிட்சம், பிரபலஸ்தர் நேசம், உததியோக உயர்வு, பாக்கிய விருத்தி, கல்விகலைகளில் பட்டம் பெறுதல் ஆகிய நற்பலன்களை யளிக்கும்.

2. மேஷம், கன்னி, தனுசு, கும்பம் இவ்விரரசியையுடையோருக்கு மனுேபலம், நல்லகாரியம் முடித்தல், வழக்குகளில் வெற்றி கொள்ளுதல் ஆகிய வல்லமை தரும். நன்மனசில் நற்கைங்கர்யங்கள் செய்தல் ஆகும். ஒப்பந்தம் ஏற்படுதல் நம்பிக்கை நாணயம் ஏற்படுதல் ஆகும். குருவின் நற்பல ஸ்தானத்தில் வேறுகிரகம் இருப்பதால் மேற்கண்ட பலன் உயர்த்த ஸ்திதியிலேயே நடந்துவரும்.

3. மிதுனம், சிம்மம், விருச்சிகம் இவ்விராசியையுடையோக்கு மறைமுக சத்துரு, இருணம், இருப்பிடசௌகரியமின்மை

வீண் அலைச்சல் ஆகிய அதமபலன் ஏற்படும். ஜாதகத்தில் சுபகிரக திசாபுத்தி நடப்பவருக்கு சுபபலனாகவே நடக்கும்.

சாந்தி :– எல்லா ராசியை யுடையோரும் சிவாலயம் சென்று அருள்மிகு தெக்ஷிணாமூர்த்தி சுவாமிக்கு குருவாரத்தில் அபிஷேகம் அலங்காரம்செய்து பூசித்தல்வேண்டும். தெக்ஷிணாமூர்த்தி சுவாமியின் சன்னதிலேயே வேதம் ஓதுவோருக்கு வஸ்திரதானம், சுவர்ணதானம் செய்துவர சகலபாக்கியங்களும் நல்வாழ்க்கையும் ஏற்படும்.

1. மேஷம் :- அசுவதி – பரணி. கார்த்திகை – $\frac{1}{4}$
(சு. சே. சோ. லா. - லி. லு. லே. லோ. – அ.)

மேஷராசி 9 பாதங்களும் சுபமான பலனைதரும். குடும்பாபிவிருத்தியில் நல்ல தன வருமானம் வரும். பொதுநலக் காரியங்களை ஏற்று நடத்துதல் ஆகும். வித்தியாவியாபாராதி கலைதுறைகளில் எதிர்பாராமல் ஸ்லாக்கிய பலனும் உயர்வும் ஏற்படும், நவம்பர் 28உ முதல் துவங்குகின்ற எல்லா காரியங்களும் திருப்திகரமாக நடக்கும். நவம்பர் 21, 22, 23, 24, 25, 28, 29 டிசம்பர் 2, 3, 9, 10, 11, 12 தேதிகளில தனாதாயம் மனவமைதி ஏற்படுதல் உத்தியோகத்தில் உயர்வு ஏற்படுதல் ஆகிய நற்பலன்கள் ஆகும். நவம்பர் 17 டிசம்பர் 13, 14, 15 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

2. ரிஷபம் :- கார்த்திகை $\frac{3}{4}$ – உரோகிணி – மிருகசீர்ஷம் $\frac{1}{2}$
(இ. ஊ. ஏ. – ஒ. வ. வி. வூ. – வே. வோ.)

ரிஷபராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். குடும்பாபிவிருத்தியில் பண வருமானத்தில் முயற்சித்த வகையில் கணிசமாக வரும். வித்தியாவியாபாரரதிகளில் எழுத்து மூல விஷயங்களில் டிசம்பர் 4 தேதி முதல் நல்லன ஏற்படும். வீடு வாகனங்களில் நற்பல பிராப்தியை ஏற்படுத்தும். மனைவிக்கு சிரரோகம் போன்ற சாதாரண நலிவுகள் நீங்குவதாகும். புத்திரர்களின் சுகம் நன்ருக இருந்துவருப். நவம்பர் 17, 23, 24, 25, 26, 27, 30 டிசம்பர் 1, 4, 5, 6, 11, 12 தேதிகளில் தனாதாயாதி நற்பலன்களையளிக்கும். நவம்பர் 18, 19, 20 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

3. மிதுனம் :- மிருகசீர்ஷம் $\frac{1}{2}$ – திருவாதிரை – புனர்பூசம் $\frac{3}{4}$
(கா. கி. - கு. க. ஸ. ச்சா. – கே. கோ. ஹ.)

மிதுனராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். குடும்பாபிவிருத்தியில் பண வருமானம் வந்துகொண்டிருக்கும். வீடு வாகன பிராப்தியில் மாறுதல் ஏற்படும். சத்துருவின் பாதக-

செயல்களுக்கு பரிகாரம் ஏற்படும். செய்தொழிலில் உத்தியோ கத்தில் அலுவல்கள் தேக்கமின்றி பரபரப்புடன் செயல்படும். அரசாங்க நன்மைகளை ஏற்படுத்தும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். நவம்பர் 17, 18, 19, 20, 26, 27, 28, 29 டிசம்பர் 6, 7, 8, 13, 14, 15 தேதிகளில் தனுதாயாதி நற்பலன்களையளிக்கும். நவம்பர் 21, 22 தேதிகள் சந்திராஷ்டமம். மற்றதேதிகளில் மத்திமபலன் தரும்.

4. கடகம் :- புனர்பூசம் ¼ - பூசம் - ஆயில்யம்.
(ஹி. - ஹு. ஹே. ஹோ. ட. - டி. டு. டே. டோ.)

கடகராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். தனவருமானம் பெரும்மதிப்பில் வரும். பூமியில் இயந்திரங்களில் நல்லன ஏற்பட்டுவரும். வித்துவத்துவம் கலைதுறைகளில் டிசம்பர் 4 தேதிக்கு விசேஷ பலன் உருவாகும். பத்திரம் தஸ்தாவேஜு களில் அரசாங்க மூல நன்னமைகள் ஏற்படச் செய்யும். சாஸ்தி ரோக்தமாக இல்லற தர்மங்கள் நடந்துக்கொண்டிருக்கும். நவம்பர் 18, 19, 20, 21, 22, 28, 29, 30 டிசம்பர் 1, 4, 5, 6, 9, 10 தனுதாயம், தெய்வதரிசனம், காரியஜெயம் ஆகிய நற்பலன்கள் ஏற்படும். நவம்பர் 23, 24, 25 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

5. சிம்மம் :- மகம் - பூரம் - உத்திரம் ¼
(ம. மி. மு. மே. - மோ. ட. டி. டு. - டே.)

சிம்மராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். பண வருமானம் பெருமதிப்பில்வரும். சகோதரர் சுகம் நன்ருக இருந்துவரும். இல்லத்தில் சுபநிகழ்ச்சி ஏற்படும். பந்துமித்திரர்களின் வருகை உபசரணை நடக்கும். தாரபுத்திரர்களின் சொக்கியம் நன்ருக இருந்துவரும். நவம்பர் 28உ ஆனுல் முயற்சித்த எல்லா காரியங் களும் வெற்றிகரமாக நடக்கும். தாரபுத்திரர்களின் சௌக்கிபம் நன்ருக இருந்து வரும். நவம்பர் 21, 22, 23, 24, 25, 30 டிஸம்பர் 2. 3,6, 7, 8, 11, 12 தேதிகளில் தனுதாயாதி நற்பலன்களையளிக் கும். நவம்பர் 26, 27 தேதிகள் சந்திராஷ்டம். மற்ற தேதிகளில் மத்திம பலன் தரும்.

6. கன்னி :- உத்திரம் ¾ - ஹஸ்தம் - சித்திரை ½
(டோ. ப. பி. - பு. ஷ. ண. ட. - பே. போ.)

கன்னியா ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். தனவருமானங்கள் நல்ல விதத்தில் வந்து சேரும். இரத்தின பூஷணம் தரும். உறவினர் ஒருவர் மனவருத்தப்பட்டு பின் கூடுவர். வித்தியா வியாபாராதி கலைதுறைகளில் டிசம்பர் 4உ முதல் நன்மைகள் பலஏற்படும். தாரபுத்திரர்களின் சௌக்கியம்

நன்ருக இருந்து வரும். நவம்பர் 17, 23, 24, 25, 26, 27 டிசம்பர் 2, 3, 4, 5, 6, 9, 10, 13, 14, 15,தேதிகளில் தனுதயாதிநற்பலன்களை ஏற்படுத்தும். நவம்பர் 28, 29தேதிகள் சந்திராஷ்டமம், மற்ற தேதிகளில் மத்திம பலன் தரும்.

7. துலாம் :- சித்திரை ½ - சுவாதி - விசாகம் ¾

(ர. ரி. - ரு. ரே. ரோ. தா. - தி. து. தே.)

துலாராசி 9 பாதங்களும் மிச்சிர பலனுக நடக்கும். குடும்பத்தில் 4 விதங்களில் பண வருமானம் வரும். சகோதரருக்கு நன்மை உண்டாகும். வீடுவாகன பிராப்தியில் நல்ல சௌகரியம் தரும். தாரபுத்திரர்களின் சுகம் நன்ருக இருந்துவரும். கல்வி கலை தொழில் துறைகளில் அரசாங்க நன்மைகள் ஏற்பட்டுக்கொண்டிருக்கும். நவம்பர் 18, 19, 20, 26, 27, 28, 29 டிசம்பர் 5, 6, 7, 8, 11. 12 தேதிகளில் தனுதாயாதி நற்பலன்களையளிக்கும். நவம்பர் 30 டிசம்பர் 1 இத்தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திம பலன் தரும்.

8. விருச்சிகம் :-¼விசாகம் ¼ - அனுஷம் - கேட்டை.

(தோ. - ந. நி. நு. நே. - நோ. ய. யி. யு.)

விருச்சிகராசி 9 பாதங்களும் மிச்சிர பலனுக நடக்கும். பண வருமானம் மிடுக்கான தோரணைக்கு ஏற்ப வந்துக்கொண்டிருக்கும். அடிக்கடி நெருக்கடியாக செலவுகளும் ஏற்படுவதாகும். பூமியில் இயந்திர சாதனங்களில் பணம் மூடங்கும். டிசம்பர் 4 தேதி ஆனுல் வித்துவத்துவம் கலைதுறைகளில் ஒப்பந்தங்களில் நல்ல பலனை ஏற்படுத்தித்தரும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். நவம்பர் 17, 21, 22, 28, 29, 30 டிசம்பர் 1, 7, 8, 9, 10, 13, 14, 15 தேதிகளில் தனுதாயாதி நற்பலன்களையனிக்கும். டிஸம்பர் 2, 3 தேதிகளில் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திம பலன் தரும்.

9. தனுசு :- மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

(யே, யோ. பா. பி. - பு. த. ப. ட. - பே.)

தனுர்ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனுக நடக்கும். குடும்பாபி விருத்தியில் பண வருமானங்கள் வந்துக்கொண்டிருக்கும். அடிக்கடி சுபச் செலவும் ஆகும். தொழில் துறையில் விளம்பரமும் முதலீடும் செய்யும். ஸ்திரிவழியினரின் நலனுக்கு ஈடுபாடு நல்கும். ஸ்ரீ துர்க்காம்பிகைக்கு அருச்சனைசெய்ய தாரபுத்திரர்களுக்கு சௌக்கிய பலனைத்தரும் எல்லா காரியங்களும் குழப்பமின்றி நடந்துவரும், நவம்பர் 18, 19, 20, 23, 24, 25, 30 டிசம்பர் 1, 2, 3, 9, 10, 11, 12 தேதிகளில் தனுதாயாதி நற்பலன்களையளிக்கும். டிசம்பர் 4, 5, 6 தேதிகல் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திம பலன் தரும்.

10. மகரம் :- உத்திராடம் $\frac{3}{4}$ - திருவோணம் - அவிட்டம் $\frac{1}{2}$
(போ. ஜ. ஜி. - கி. கு. கே. கோ. - கா. கி.)

மகரராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். குடும்பாபி விருத்தியில் நல்ல பணவருமானங்கள் வந்துக்கொண்டிருக்கும். சகோதரர் நலம் நன்ருக இருந்து வரும். வீடு வாகனங்களில் பொருள் முடங்கும். வித்தியா வியாபாராதி கலைதுறைகளில் நற்பலன்வரும். தாம்பத்திய வாழ்க்கையில் தெய்வபக்திமிகுந்து தான தர்மம் செய்விக்கும். நவம்பர் 17, 21, 22, 26, 27 டிசம்பர் 2, 3, 4, 5, 6, 11, 12, 13, 14, 15 தேதிகளில் தனுதாயாதி நற்பலன் களையளிக்கும். டிசம்பர் 7, 8 தேதிகள் சந்திராஷ்டம். மற்ற தேதிகளில் மத்திம பலன் தரும்.

11. கும்பம் :- அவிட்டம் $\frac{1}{2}$ - சதயம் - பூரட்டாதி $\frac{3}{4}$
(கு. கே, - கோ. ஸ. ஸி. ஸு. - ஸே. ஸோ. தா.)

கும்பராசி 9 பாதங்களும் சுபமானபலனைத்தரும். குடும்பாபி விருத்தியில் பணவருமானம் வரும். சகோதரர் விசுவாசம் ஒத்துமைப்பு பலம் தரும். வித்தியா வியாபாராதிகளில் கலைதுறையில் நல்லனஏற்பட்டுவரும். பூமியில் இயந்திரசாதனங்களில் விருத்தி பலன்ஏற்படும். எல்லாகாரியங்களும் வெற்றியாக நடந்துவரும் தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்து வரும். நவம்பர் 17, 18, 19, 20, 23, 24, 25, 28, 29 டிஸம்பர் 5, 6, 7, 8, 13, 14, 15 தேதிகளில் தனுதாயாதி நற்பலன்களை யளிக்கும். டிசம்பர் 9, 10 தேதிகள் சந்திராஷ்டமம் மற்ற தேதிகனில் மத்திமபலன்தரும்.

12. மீனம்:- பூரட்டாதி $\frac{1}{4}$ - உத்திரட்டாதி - ரேவதி.
(தி. - து. ஸ. ச. த. - தே. தோ. ச. சி.)

மீனராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். குடும்பாபி விருத்தியில் பண வருமானங்களில் நல்லஸ்திதியை ஏற்படுத்திக் கொண்டிருக்கும். வித்தியா வியாபாராதிகளில் கலை துறையில் டிஸம்பர் 4 தேதி ஆனல் நல்ல வாய்ப்புகளை ஏற்படுத்தும். சிவந்த வஸ்து மரச்சாமான்களின் பிராப்தியையளிக்கும். தார புத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்து வரும். நவம்பர் 18, 19, 20, 21, 22, 26, 27, 30 டிசம்பர் 6, 7, 8, 9, 10 தேதிகளில் தனு தாயாதி நற்பலன்களையளிக்கும். டிசம்பர் 11, 12 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திம பலன் தரும்.

அம்பிகை நாமாவளி இசைப் பாடல்

திருமுறைக்கலாநிதி,

வேலூர், திரு. க. சொக்கலிங்க ஓதுவார்.

இராகம் : சுபந்துவராளி.] [ஆதிதாளம் : திஸ்ரநடை.

காமாக்ஷி காமாக்ஷி கருணைமிகும் காமாக்ஷி
காஞ்சிநகர் காமாக்ஷி கடைக்கண்பார்க்கும் காமாக்ஷி (கா)

1. நாமிருக்கும் நாட்டினுக்கு நலம்விளைக்கும் காமாக்ஷி
நல்லகல்விச் செல்வமெலாம் நமக்களிக்கும் காமாக்ஷி (கா)

2. ஏலவார்குழலி என்று இயம்புகின்ற காமாக்ஷி
ஏகம்பர் இதயத்தில் இடங்கொண்ட காமாக்ஷி (கா)

3. அரனை ஆகமவழியில் அர்ச்சிக்கின்ற காமாக்ஷி
அனுகி அன்புகொள்பவரை ஆதரிக்கும் காமாக்ஷி (கா)

4. கம்பைநதி வெள்ளம்வரக்கண்ட அன்னை காமாக்ஷி
காதலோடு ஏகம்பனைக்கண்டு தழுவும் காமாக்ஷி (கா)

5. ஈசன் இடப்பாலமர்ந்த எங்கள் அன்னை காமாக்ஷி
எண்ணான் கறம்செய்துஉலகுக்கின்பம்தரும் காமாக்ஷி (கா)

6. எல்லா அண்டங்களையும் ஈன்றெடுத்த காமாக்ஷி
எவ்வுயிர்க்கும் உயிராகி இனிதுகாக்கும் காமாக்ஷி (கா)

7. துன்பம்நீக்கும் துர்க்கையாகிச் சுகம்அளிக்கும் காமாக்ஷி
சுடர்விளக்காய்த் தோன்றித் துணையாகிவரும்காமாக்ஷி (கா)

8. எழில்கொழிக்கும் இலக்குமியாய் இல்லில்வாழும் காமாக்ஷி
இரவுபகலும் இறைஞ்சுவார்க்கு எதிர்நின்றருளும் காமாக்ஷி
(கா)

9. சான்றோருய் வாழச் சரஸ்வதியாய்வரும் காமாக்ஷி
சரணடைந்தார்க்கெவ் வரமும்தான் கொடுக்கும் காமாக்ஷி
(கா)

10. அட்டஇலக்குமியாகி அருள் வழங்கும் காமாக்ஷி
அடைந்தவர்க்கு ஆனந்தம்அளிக்கும் அன்னை காமாக்ஷி (கா)

11. மலர்தூவி வழிபடுவார் மனமகலாக் காமாக்ஷி
மனஇருளைப் போக்கும் ஞானமணிவிளக்குக்காமாக்ஷி (கா)

12. கருத்தில் இருத்திடுவாரவர் கவலைநீக்கும் காமாக்ஷி
கரங்குவிப் பாரைக்கரத்தில் எடுத்தணைக்கும் காமாக்ஷி (கா)

13. சங்கரன் தன்னோடமர்ந்து தாணிகாக்கும் காமாக்ஷி
தளராமனம் தந்துஎன்றும் தாயாய்வரும் காமாக்ஷி (கா)

14. மாசிலாதவர் மனத்தில் வாசம்செய்யும் காமாக்ஷி
மங்களநல் வாழ்வருளும் எங்கள்அன்னை காமாக்ஷி (கா)

செய்திகள்

ஆயில்யத் திருநாள் ஆலய வழிபாடு

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் ஜன்மநட்சத்திரமாகிய ஆயில்யத் திருநாள் ஆலயவழிபாடு 12—10—82 செவ்வாய்க்கிழமையன்று காலை திருக்கைச்சினம் அருள்மிகு கைச்சின்னநாதர் கோயிலிலும் மாலை திருக்கோளிலி (திருக்குவளை) அருள்மிகு பிரமபுரீசுவரர் திருக்கோயிலிலும் மிகச் சிறப்பாக நடைபெற்றது. விசேஷ அபிஷேக ஆராதனை களுடன் நிகழ்வுற்ற வழிபாட்டின்போது அவ்வத்தலத் திருப்பதி கங்கள் பாராயணம் செய்யப்பெற்றன. திருக்கைச்சினம் திருக் கோயிலில் தருமையாதீனப் பல்கலைக் கல்லூரிப் பேராசிரியர் திரு. சொ. முத்தையன்,. எம் ஏ., அவர்கள் 'கண்ணப்பர்' பற்றியும் ஆதீன அடியவர் ஸ்ரீ நெல்லையப்ப சுவாமிகள் தலபுராணம் பற்றியும் அதிபத்தர் பற்றியும் உரையாற்றினர். மாலை திருக்கோளிலி திருக்கோயிலில் திரு. சொ. முத்தையன் எம். ஏ., 'வழிபாடு' பற்றியும் ஆதீன அடியவர் ஸ்ரீ நெல்லையப்ப சுவாமிகள் தலபுராணம் பற்றிக்கூறி 'அன்னமகிமை' என்னும் பொருளிலும் உரையாற்றினர். அச்சிடப்பெற்ற தலத்திருப்பதிக நூல் வழிபாட்டிற் கலந்துகொண்ட அன்பர்கட்கு வழங்கப்பட் டது. அன்பர்பலர் வழிபாட்டிற் கலந்துகொண்டு பயனுற்றனர்.

ஸ்ரீ அருணந்திதேவர் குருபூஜைவிழா

தருமையில் :

சந்தான குரவருள் இரண்டாமவராகிய ஸ்ரீ அருணந்திதேவர் குருபூஜைவிழா 14—10—82 வியாழக்கிழமையன்று நிகழ்வுற்றது. காலை தருமையாதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலில் சந்தானாசாரியர்களுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் வழிபாடு நிகழ்வுற்றது. மாலை 7 மணியளவில் வித்துவான் திரு. மு. கோவிந்தராசன் அருணந்திதேவர் அருள்வரலாறுகூறிச் "சிவஞான சித்தியார்" என்னும் பொருள்பற்றி விரிவுரை ஆற்றினர். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் காலை, மாலை இருவேளைகளிலும் எழுந்தருளி வழிபாடாற்றினர்கள்.

திருத்துறையூரில் :

திருத்துறையூர் ஸ்ரீ சிஷ்ட குருநாதேசுவரர் ஆலயத்தில் சுவாமி அம்பாள் ஆகிய மூர்த்தங்களுக்கும், ஸ்ரீ அருணந்தி

தேவர் குருமூர்த்த ஆலயத்தில் ஸ்ரீ அருணந்தி தேவருக்கும் விசேஷ அபிஷேக ஆராதனைகள் நிகழ்வுற்றன. மாலை 7 மணி அளவில் தருமபுரம் ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியர் திரு. கா. ம. கண்ணப்பன், பி. லிட். 'அருணந்தி தேவர் அருள்வரலாறு' பற்றியும் மயிலம் தமிழ்க் கல்லூரிப் பேராசிரியர் புலவர் திரு. பழ. முத்தப்பன், எம். ஏ. 'அருணந்தி தேவர் அருள் நூல்கள்' பற்றியும் திருவதிகை, தமிழாசிரியர் திரு. ந. சண்முகசுந்தர தேசிகர் 'குருபூஜைப் பேறு' பற்றியும் விரிவுரையாற்றினர். அன்பர்பலர் கலந்துகொண்டு குருவழிபாடு ஆற்றியும் விரிவுரை கேட்டும் பயனுற்றனர்.

குருவருளும் அருளுபதேசமும்

தருமையாதீனத் திருமடத்தில் ஒவ்வொரு ஆங்கில மாதத்திலும் முதல் ஞாயிற்றுக்கிழமையன்று காலை சரியாகப் பத்து மணிக்கு, ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களை அன்பர்கள் வழிபட்டு அருளுபதேசம் பெறும் பிரார்த்தனை வழிபாட்டுக் கூட்டம் நிகழ்ந்து வருகின்றது. இம்மாதம் 7—11—82 அன்று 18 ஆவது சிறப்பு வழிபாட்டுக் கூட்டம் நிகழ்வுற்றது. காலை 10மணிக்குத்தொடங்கி முதலில் கூட்டுப்பிரார்த்தனை நிகழ்ந்தது. அடுத்துத் தருமையாதீன வேத சிவாகம பாடசாலை ஆசிரியர் திரு. பி. எஸ். கிருஷ்ணமூர்த்திசாஸ்திரிகள், கைவல்யஉபநிஷதச் சிந்தனையாக, தகரவித்தை (ஈசனை இதயத்தில் தியானிப்பது) பற்றி விளக்கம் கூறினர். டாக்டர். திரு. ப. அருணாசலம் அவர்கள் சிவானந்த அனுபவம் பெறுதல்பற்றி உரை நிகழ்த்தினர். தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருத்தொண்டர் புராணச்சிந்தனையாகச் சுந்தரர் திருவடி தீட்சை பெற்றமைபற்றிவிளக்கம்அருளினர்கள். சுந்தரர்திருவதிகையை மிதித்தற்கு அஞ்சியமைபற்றி விளக்கம் அருளுகையில் பெரியோர்கள், தம்மின் பெரியவர் வாழ்ந்த இடங்களைப் புனித இடங்களாகக் கருதுதல் நம் சமய மரபாகும் என்பதையும் எடுத்துக்காட்டாக நம் சமய மூத்த அடியாராகிய காரைக்கால் அம்மையார், பெருமான் எழுந்தருளி இருக்கும் திருக்கயிலாயத்திற்கும் அங்கிருந்து திருவாலங்காட்டிற்கும் சென்றபொழுது தலையால் நடந்துசென்றமையையும் அவர்களின் வழியைப் பின்பற்றித் திருஞானசம்பந்தர், அம்மையார் எழுந்தருளியிருந்த திருவாலங்காட்டை மிதிக்க அஞ்சி அருகில் இருந்த ஊரில் தங்கியமையையும் இவர்களின் வழிவந்த சுந்தரரும் அப்பர் அடிகள் திருத்தொண்டுசெய்த தலமாகிய திருவதிகையினை மிதிக்க அஞ்சிச் சித்தவடமடத்தில் தங்கியமையையும் விளக்கி வழிவழிவந்த பண்பாட்டு மரபு இது என அருளியமை புதிய

இனிய சிந்தனையாக அமைந்திருந்தது. மயிலாடுதுறை நகரப் பெருமக்களும் சைவமெய்யன்பர்களும் கலந்துகொண்டு பயன் பெற்றனர். அடுத்த பிரார்த்தனைக்கூட்டம் 5—12—82 அன்று நிகழ இருக்கிறது. அன்பர்கள் கலந்துகொண்டு பயன் பெறுவார்களாக.

ஸ்ரீ மகாலட்சுமி துர்க்காதேவிக்கு 32 ஆவது சதசண்டி வேள்விவிழா

தருமையாதீனம் ஸ்ரீ அஷ்டாதசபுஜ மகாலட்சுமி துர்க்கா தேவிக்கு இவ்வாண்டும் 18—10—82 முதல் 27—10—82 முடியப் பத்துநாட்களும் நவராத்திரி விழாவை முன்னிட்டு, உலக நலம் கருதி, சதசண்டி வேள்வி விழா ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் திருவுளப்பாங்கின்வண்ணம் மிகச்சிறப்பாக நடைபெற்றது. ஸ்ரீ துர்க்காதேவி சந்நிதியில் மலர்களாலும் மின் விளக்குகளாலும் அலங்கரிக்கப் பெற்றிருந்த மகாவேள்வி மண்டபத்தில் யாக கலசங்கள் வைத்து அலங்கார ஆராதனைகள் செய்வித்துச் சிறப்பான முறையில் சதசண்டி வேள்வி நிகழ்த்தப் பெற்றது. நாள்தோறும் சுவாசினீ, குமாரி, வடுபூஜைகள், சதுர் வேத பாராயணம், தேவீ மகாத்மிய பாராயணம், திருமுறைகள், அபிராமி அந்தாதி பாராயணம். ஸ்ரீ துர்க்கா தேவிக்கு லட்சார்ச்சனை, ஸ்ரீ வித்யா சக்கரமாகிய மேருவிற்கு, சகஸ்ர நாமார்ச்சனை மற்றும் விசேஷ அபிஷேக, அலங்கார ஆராதனைகள் ஆகியன நடைபெற்றன.

26—10—82 செவ்வாயன்று பகல் சப்தசதி ஹோமமும் மகா பூரணாகுதியும் நிகழ வேள்வி இனிது நிறைவுற்றது. 27—10—82 புதன்கிழமை விஜய தசமியன்று காலை ஸ்ரீ துர்க்கா தேவிக்கு யாக கலசாபிஷேகமும் விசேஷ அலங்கார ஆராதனைகளும் நிகழ்வுற்றது. 18—10—82 முதல் 27—10—82 முடிய நாள்தோறும் இரவு வழிபாட்டின்போது புராணம் என்ற அங்கமாக பிர்மஸ்ரீ பி. எஸ். கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் ஸ்ரீதேவிபாகவத விரிவுரை நிகழ்த்தினர். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் இருவேளைகளிலும் எழுந்தருளி வழிபாடாற்றி அன்பர்கட்குத் திருவருட் பிரசாதம் வழங்கியருளினார்கள்.

ஆதீனக்கல்வி நிலையங்களின் கலைமகள் விழா

தருமையாதீனக் கல்வி நிலையங்களாகிய வேத சிவாகம பாடசாலை, தேவாரப் பாடசாலை, ஸ்ரீ குருஞானசம்பந்தர் தொடக்கப்பள்ளி, ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்நிலைப்பள்ளி, ஆதீனப் பல்கலைக் கல்லூரி என்னும் இவற்றின் சார்பில் நவராத்திரி நாட்களில் கலைமகள் விழா இனிதே நிகழ்வுற்றது.

நாள்தோறும் மாலை 3 – 30 மணியளவில் தருமையாதீனத் திருநெறிய தெய்வத்தமிழ் மன்றத்தில் விழா நிகழ்ச்சிகள் நடைபெற்றன. மயிலாடுதுறை திரு. வி. ஆறுமுகம்பிள்ளை I. A. S. (Retd), வழக்குரைஞர் திரு. சி. ஆர். குஞ்சிதபாதம் அய்யர், பி. ஏ. பி. எல்., மயிலாடுதுறை நகராட்சி ஆணையர், திரு. வை. கோபால்சாமி, பி. ஏ., மேலையூர் தாசில்பண்ணை செந்தமிழ்ப் புரவலர் திரு. இரா. இராஜசேகரன், பி. எஸ்சி., பி. எல்., செஞ்சொற் கொண்டல் டாக்டர் திரு. சொ. சிங்கார வேலன் எம். ஏ., பி. எச்டி., மயிலாடுதுறை டாக்டர் திரு. மு. சுவாமிநாதன் எம். பி., பி. எஸ்., தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி முதல்வர், வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ., தருமபுரம் ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்பள்ளித் தலைமை யாசிரியர் திரு. த. விவேகானந்தம் பி. ஏ., பி. எட்., தருமை யாதீன அடியவர் ஸ்ரீ நெல்லையப்ப சுவாமிகள் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினர். ஆதீனக்கல்வி நிலையங்களின் ஆசிரியர் களும், ஆதீனப் பல்கலைக் கல்லூரி மாணவர்களும் விரிவுரை நிகழ்த்தினர். நாள்தோறும் ஆதீனக் கல்வி நிலைய மாணவ மாணவியரால் கலைநிகழ்ச்சிகள் நிகழ்த்தப்பெற்றன.

ஆதீனத் திருக்கோயில்களில் நவராத்திரிவிழா

நவராத்திரி விழாவை முன்னிட்டுத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருக்கடவூர், திருபுவனம், திருவையாறு, வைத்தீ சுவரன்கோயில், சீகாழி, திருப்பனந்தாள், குத்தாலம், பேரளம், மயிலாடுதுறை – வள்ளலார்கோயில், திருக்குவளை, திருக்கற்குடி, விளநகர், ஆச்சாள்புரம் ஆகிய திருத்தலங்களில் தருமை யாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் திருவுளப் பாங்கின்வண்ணம் உலகநலம் கருதி, அம்பாளுக்கு அருச்சனை யும் விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகளும் சிறப்பான முறையில் நடைபெற்றது. விழாநாட்களில் அவ்வத்தலங்களில் அம்பிகையின் அருள்நலம்பற்றிய தலைப்புக்களில் தக்க அறிஞர் களைக்கொண்டு சமய விரிவுரைகள் நிகழ்த்தப்பெற்றன. தலப் பெருமக்கள் வழிபாடு ஆற்றியும், சொற்பொழிவுகளைக்கேட்டும் பயன்பெற்றனர்.

திருநள்ளாற்றில் சனிப் பெயர்ச்சி விழா

திருநள்ளாறு ஸ்ரீதர்ப்பாரண்யேசுவரசுவாமிதிருக்கோயிலில் 28—10—1982 அன்று நிகழ்வுற்ற சனிப்பெயர்ச்சி விழாநாளில் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருநள் ளாற்றுக்கு எழுந்தருளி, அங்குக் குடிமக்களுக்கு எண்ணெய் முழுக்காட எண்ணெய்வழங்கி எள்ளன்னமும் வழங்கினார்கள்,

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருக்கோயிலுக்கு எழுந்தருளி சுவாமி அம்பாள் ஆகிய மூர்த்திகளுக்கும் சனிபகவானுக்கும் விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் சிறப்புவழிபாடு நிகழ்த்தியருளினார்கள். மேலும், அன்றிரவு சனிபகவான் கன்னியாராசியிலிருந்து துலாராசிக்குப் பிரவேசிக்கும் காலத்தில் சுவாமி அம்பாளையும் சனிபகவானையும் தரிசித்து, அன்பர்களுக்குப் பிரசாதம் வழங்கியருளினார்கள். காஞ்சிபுரம் தொண்டைமண்டலாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களும் தரிசனத்திற்கு எழுந்தருளி இருந்தார்கள். பாண்டிச்சேரி வானொலிநிலையத்தாரால்சனிப்பெயர்ச்சிவிழாநேர்முகவருணனை நிகழ்த்தப்பெற்றது. திருநள்ளாற்றில் பாண்டிச்சேரி ஆளுனர் அவர்களும், முதலமைச்சர் மாண்புமிகு. டி. இராமச்சந்திரன் அவர்களும், அமைச்சர் மாண்புமிகு கதிர்வேல் அவர்களும் பாண்டிச்சேரி அரசு தலைமைச்செயலரும், அறநிலையத்துறை ஆணையரும் விழாவின்போது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களைத் தரிசித்தனர். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் பிரசாதம்வழங்கி ஆசியருளினார்கள். ஸ்ரீலஸ்ரீகுருமகாசந்நிதானம் அவர்கள் திருக்கோயில் அலுவலர் முதலிய அன்பர்கள் பலருக்கும் புத்தாடை வழங்கி ஆசியருளினார்கள். இலட்சத்திற்கு மேற்பட்ட அன்பர்கள் வந்திருந்து வழிபட்டனர்.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி
பதினொன்றும் ஆண்டுக் குருபூஜை விழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்தின் 25 ஆவது குருமகாசந்நிதானமாக எழுந்தருளி இருந்து 26½ ஆண்டுக் காலம் அருளாட்சி செய்தருளிய ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்களின் பதினொராவது ஆண்டுக் குருபூஜை விழா 8—11—82 திங்கட்கிழமையன்று குருமூர்த்த ஆலயத்தில் சிறப்பாக நடைபெற்றது. காலை, மாலை இருவேளைகளிலும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி விசேஷ அபிஷேக ஆராதனைகள் நிகழ்த்தி அன்பர்கட்கு அருட்பிரசாதம் வழங்கினார்கள்.

காலை வழிபாட்டின்பின்னர் சாத்திர ஆசிரியர்கள் பற்றிச் சொற்பொழிவுகள் நிகழ்வுற்றன. மகாவித்துவான் சி. அருணைவடிவேல் முதலியார் அவர்களும் ஆதீனக்கல்விநிலையஆசிரியர்களும் சொற்பொழிவு ஆற்றினர். நண்பகல் மாகேசுவரபூசை நிகழ்வுற்றது. மாலை தருமையாதீனத் திருக்கோயில்களின் திருமுறைப் பணியாளர்கள் திருமுறை இசையரங்கு நிகழ்த்தினர். இரவு வழிபாட்டின்போது மெய்கண்ட நூல்கள் அறிமுகம் விழாமலராக வெளியிடப்பெற்றது. 'கயிலைக் குருமணி' என்ற

தலைப்பில் தருமையாதீனப் பல்கலைக்கல்லூரி மாணவர்கள் சிவா, செல்வக்குமார் குழுவினரின் வில்லிசைநிகழ்ச்சி நடைபெற்றது. ஸ்ரீலஸ்ரீகுருமகாசந்நிதானம்அவர்கள் வந்திருந்தபக்தர்களுக்குக் குருவருட் பிரசாதம் வழங்கியருளினார்கள்.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அறக்கட்டளைச் சார்பில்

ஸ்ரீ காசியில் :

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி முத்திப்பேறு எய்திய ஸ்ரீ காசி குமாரசுவாமி மடத்தில் குருமணியின் திருவுருவப் படத்திற்குச் சிறப்பு வழிபாடும் ஸ்ரீ விசாலாட்சியம்மை உடனாகிய ஸ்ரீ விசுவ நாதர், ஸ்ரீ அன்னபூரணி, ஸ்ரீ கேதாரநாதர் ஆகியமூர்த்திகளுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகளும் நண்பகல் மாகேசுவர பூசையும் சாதுக்களுக்குப் பண்டாராவும் சிறப்பாக நடை பெற்றன.

மயிலாடுதுறையில் :

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி குருபூசை விழாவன்று மாலை மயிலாடுதுறை தெய்வத்தமிழ் மன்றத்தினரால் ஏ. வி. சி. பழைய திருமண மண்டபத்தில் நினைவு விழாக் கொண்டாடப்பெற்றது. திரு. சுகி சிவம் அவர்கள் "அபிராமி என்னும் அருமருந்து" என்னும் பொருளில் சிறப்புரை ஆற்றினார். அன்பர் பலர் வந்திருந்து கேட்டுப் பயனுற்றனர்.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் ஞானபீடத்து அமர்ந்தநாள்

தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஞான பீடத்து அமர்ந்ததிருநாள் 10—11—82 புதன்கிழமையன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. அன்று காலை ஸ்ரீ ஞானபுரீசுவரருக்கு உருத்திராபிஷேகமும் விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனை களும் நிகழ்வுற்றன. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்திற்குத் திக்பால விஜயஸ்நாநசாந்தி, ஹோமம் நிகழ்வுற்றது. ஸ்ரீஅஷ்டாதசபுஜ மகாலட்சுமி துர்க்காதேவிக்கு விசேஷ அபிஷேக ஆராதனை களும், அம்பாள் சந்நிதியில் ஸ்ரீ சூக்தஅகண்ட பாராயணமும் நிகழ்ந்தன. விழாவிற் கலந்துகொண்ட அன்பர்களுக்கு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் அருட்பிரசாதம் வழங்கியருளி னார்கள். மெய்யன்பர் பலர் விழாவிற் கலந்து கொண்டு குருதரிசனம் செய்து பயன்பெற்றனர்.

ஸ்ரீ குருஞானசம்பந்தர் பணிமன்றம்

மேலையூர் (கிளை)

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் அருளாசி துணைக்கொண்டு தொடங்கப்பெற்ற ஸ்ரீ குருஞான சம்பந்தர் பணிமன்ற மேலையூர்க்கிளையின் இரண்டாவது ஆண்டு விழாவும் இளைஞர் அணியின் துவக்க விழாவும் 9—11—82 செவ்வாய் மாலை மேலையூர் அருள்மிகு பிரியாவிடங்கேசுவரர் ஆலயத்தில்நடைபெற்றது. பேராசிரியர், திரு. த. அகரமுதல்வன் எம். ஏ,. வாழ்த்துரை வழங்கினார். மேலையூர் சீனிவாசா உயர்பள்ளித் தலைமையாசிரியர் திரு. பொன். சுவாமிநாதன் பி. எஸ்சி., பி. எட்., பரிசுகள் வழங்கினார். ஆலய வழிபாடு, சிவபுராணம் ஓதுதல், உழவாரப்பணிசெய்தல், சமுதாயத் தொண்டு, சமயவிரிவுரைகள் ஆற்றுதல், திங்கள் ஓர் கோயில் சிறப்பு வழிபாடு முதலிய பணிகளை இம்மன்றத்தினர் செய்து வருகின்றனர். தீபாவளித்திருநாளில் ஆதரவற்றோர்க்குப்புடவை வேட்டி முதலியன அன்பளிப்பாக வழங்கிவருகின்றனர். பணி மன்றத் திட்டங்களைச் சிறப்பாக நிறைவேற்றும்பொருட்டும் தொண்டுசெய்யும் மனப்பான்மையை வளர்க்கும் பொருட்டும் தற்போது இளைஞர் அணி தொடங்கப்பெற்றுள்ளது. விழாவில் அன்பர்கள் பலர் கலந்துகொண்டு பயனுற்றனர்.

மதுரை (கிளை)

மதுரை ஸ்ரீ குருஞானசம்பந்தர் பணி மன்றத்தின் சார்பில் 1982 செப்டம்பர் மீ 5, 12, 19, 26 ஆகிய தேதிகளில் (ஞாயிறு தோறும்) திருமுறைக்கூட்டு வழிபாட்டுவிழா சிறப்புற நடை பெற்றது. மதுரை ஸ்ரீ மீனாட்சிசுந்தரர் கோயிலில் சங்கத்தார் மண்டபத்தில் மதுரைப் பல்கலைக் கழகத் தமிழியற்புலப் பேரா சிரியர் B. சேதுரகுநாதன் அவர்கள் வழிபாட்டுக் கூட்டத்தில் காலை 10 மணி அளவில் அகத்தியர் தேவாரத்திரட்டுப் பகுதிக்கு விரிவுரை வழங்கினார்கள். விரிவுரை தொடங்கும் முன்பு மன்றத் துணைச்செயலாளர் புலவர். சி. கல்யாணசுந்தரனார் தலை மையில் மற்ற அன்பர்கள் சிவபுராணமும், திருவங்கமாலையும், தலப்பதிகங்களும் பாராயணம் செய்து கொண்டே சுவாமி அம்பாளை வலமாகவந்து வழிபாடு நிகழ்வுற்றது. ஸ்ரீ குருஞான சம்பந்தர் சந்நிதியில் மங்கல வாழ்த்துப்பாடி நால்வர் சந்நிதியில் வந்து வழிபாட்டை நிறைவு செய்து கொண்டனர். வித்துவான். தா. குருசாமி தேசிகர் மன்றத்தின்] சார்பில் வந்திருந்த அனை வரையும் வரவேற்று நன்றி கூறினார். [கு. மணிகண்டன், யாழ் தாராமன் பதிகங்களைப் பாராயணம் செய்தனர்.

மதுரை ஸ்ரீ குருஞானசம்பந்தர் திருமடத்தில் நாயன்மார் திருநாள் விரிவுரை

1982 செப்டம்பர் மீ 13௨ செருத்துணை நாயனுர், 14௨ புகழ்த்துணை நாயனுர் - அதிபத்த நாயனுர், 30௨ இளையான்குடி மாற நாயனுர், 27௨ ஏனதிநாயனுர், 30௨ நரசிங்கமுனையரையர், 1982 அக்டோபர் மீ 4௨ உருத்திரபசுபதி நாயனுர் 7௨ திருநாளைப்போவார் நாயனுர் திருநட்சத்திர நாட்களில் திருமடத்தில் பேராசிரியர் ந. சேதுரகுநாதனுர் அருள் வரலாற்று விரிவுரை நிகழ்த்தினுர். வழக்கம்போல் திங்கள், வியாழன் தோறும் முறையே திருவிளையாடற்புராண விரிவுரையும் பெரியபுராண விரிவுரையும் வித்துவான் தா. குருசாமி தேசிகரால் நிகழ்த்தப் பட்டது.

முப்பெருவிழா

மயிலாடுதுறை (கிளை)

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் அருளாசியுடன் 27—10—82 விஜயதசமியன்று மயிலாடுதுறை மகாதானத்தெரு 57 ஆம் எண்ணுள்ள தருமையாதீனத்திற்குச் சொந்தமான கட்டிடத்தில் ஸ்ரீ குருஞானசம்பந்தர் பணிமன்றச் சார்பில் 'அன்பகம்' தொடக்கவிழா நடைபெற்றது. அவ்வமயம் மயிலாடுதுறை ஸ்ரீ மாயூரநாதர் சந்நிதியில் இயங்கிவந்த இலவச மருத்துவமனை, பாலர்பள்ளி ஆகிய நிறுவனங்கள் இப்புதிய இடத்தில் தொடங்கி வைக்கப்பெற்றன. இம்முப் பெருவிழா செந்தமிழ்ப் புரவலர் திரு. இரா. இராஜசேகரன், பி. எஸ்சி., பி. எல். அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தஞ்சைமாவட்ட முதன்மைக் கல்வியலுவலர் திரு. எஸ். இராஜா., பி. ஏ., பி. டி., அன்பகம் பள்ளியையும் திருமதி. நீலா கிருஷ்ணமூர்த்தி பாலர் பள்ளியையும் மயிலாடுதுறை நகராட்சி ஆணையர் திரு. நா. கோபால்சாமி, பி. ஏ. மருத்துவமனையையும் இப்புதிய இடத்தில் தொடங்கி வைத்து உரையாற்றினுர்கள். மயிலாடுதுறை ரோட்டரி சங்கத்துடன் இணைந்து புதிதாகத் தொடங்கப் பெற்றுள்ள 'அன்பகம்' காது கேளாத வாய் பேசாதவர்க்கு ஆதரவுநல்கிக் கல்வியும் பயிற்சிகளும் அளிக்கும் அமைப்பு ஆகும். தற்போது அன்பகத்தில் 14மாணவர்கள் பயில்கின்றனர். இவர்களுள் நால்வர் அன்பகத்தில் உணவு, தங்கும் இடம் முதலிய வசதிகளுடன் படிக்கின்றனர். அனுபவம் பெற்ற நான்கு ஆசிரியர்கள் கல்வியும் தக்க பயிற்சிகளும் அளித்து அன்புடன் கவனித்து வருகின்றனர்; மேலும் மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளத் திட்டம் வகுத்துள்ளனர். இத்தகைய அன்பகம் கீழைத் தஞ்சை மாவட்டத்தில் இஃது ஒன்றே உள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். அன்பகம் தொடக்க விழா உள்ளிட்ட முப்பெரு விழாவில் மயிலாடுதுறை அன்பர்கள் பலர் கலந்து கொண்டனர்.

கார்த்திகை மாதச் சிறப்பு நாட்கள்

17—11—82 புதன், முடவன் முழுக்கு.
18—11—82 வியாழன், குருபெயர்ச்சி இரவுமணி 8-27. மூர்க்கநாயனார்
19—11—82 வெள்ளி, சிறப்புலி நாயனார் குருபூஜை. [குருபூஜை
21—11—82 ஞாயிறு. குத்தாலம், திருப்பறியலூர், கருங்குயில்நாதன் பேட்டை ஆகிய தலங்களில் பானுவார தீர்த்தம். இவ்விதம் நான்கு பானுவாரங்களிலும் நடைபெறும். கந்த சஷ்டி, சூரசம்காரம், வேளூர், மயிலாடுதுறை – குமரக் கட்டளை, திருச்செந்தூர், பழனி முதலிய தலங்களில் சூரசம்காரம். திருவண்ணாமலை தீப உற்சவாரம்பம்.
22—11—82 திங்கள், திருக்கடவூர் 1008 சங்காபிஷேகம். இவ்விதம் நான்கு சோமவாரங்களிலும் நடைபெறும். வேளூர் கந்தசஷ்டி தீர்த்தம்.
23—11—82 செவ்வாய், வேளூர் தெய்வயானை திருக்கல்யாணம்.
24—11—82 புதன், வேளூர் வள்ளியம்மை திருக்கல்யாணம், கிருத யுகாதி.
25—11—82 வியாழன், வேளூர் ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமி வீதி யுலாக்காக்ஷி.
26—11—82 வெள்ளி, தருமை 8 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அழகியதிருச்சிற்றம்பல தேசிக சுவாமிகள் குருபூஜை
27—11—82 சனி, தருமை 16 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சச்சிதானந்த தேசிக சுவாமிகள் குருபூஜை.
28—11—82 ஞாயிறு, பிரதோஷம்.
29—11—82 திங்கள், பரணிதீபம்
30—11—82 செவ்வாய், திருக்கார்த்திகை. திருவண்ணாமலை தீபம் சர்வாலயதீபம் வைகானஸதீபம். வேளூர்க் கிருத்திகை. தருமை ஸ்ரீசண்முகர் கிருத்திகை அபிடேகம். பௌர்ணமி விரதபூஜை. தருமை 18 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சிவஞானதேசிக சுவாமிகள் குருபூஜை. கணம்-
1—12—82 புதன், பாஞ்சராத்திரதீபம். [புல்ல நாயனார் குருபூஜை.
4—12—82 சனி, சங்கடஹர சதுர்த்தி.
6—12—82 திங்கள், ஆயில்யவிழா.
7—12—82 செவ்வாய், காலாஷ்டமி. காலபைரவாஷ்டமி. திருவையாற்றில் தீர்த்தம். ஸ்ரீ ஆட்கொண்டார் அபிடேகம் வைடையாலைக்காக்ஷி.
8—12—82 புதன், மெய்ப்பொருள் நாயனார் குருபூஜை.
9—12—82 வியாழன், மயிலாடுதுறை வள்ளலார்கோயில் ஸ்ரீ மேதா தக்ஷிணாமூர்த்திக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள். ஆனாய நாயனார் குருபூஜை
10—12—82 வெள்ளி, குத்தாலத்தில் அபிடேகம். கடைவெள்ளி -
12—12—82 ஞாயிறு, பிரதோஷம். [ஸ்தலவிருக்ஷபூஜை.
13—12—82 திங்கள், மாதசிவராத்திரி.
14—12—82 செவ்வாய், திருக்கடவூர் ஸ்ரீ முனிசுவரபூஜை. கிருஷ்ணாங் காரக சதுர்த்தசி, சர்வ அமாவாசை.
15—12—82 புதன், அனுமத் ஜயந்தி.

Printed & Published by V. Ramaiah Pillai, Managar, Dharmapuram at the Gnanasambandam Press Dharmapuram, Mayiladuthurai 10-11-82